

# திருக்கோயில்





மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தம்முடைய மே மாதச் சம்பளத்தை விழுப்புரம் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு அன்னதானக் கட்டளைக்காக வழங்குகிறார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்




தனி இதழ் : ரூ. 7.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 75.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 1000.00

மாலை 44 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | சித்ரபானு - ஆனி | ஜூலை 2002 | மணி 7



சிறப்பாசிரியர்

திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,

எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.

கூடுதல் ஆணையாளர்

திருமிகு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமிகு ஆ. குப்புசாமி

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.


முகப்பு

திருவல்லிக்கேணி

அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி

## பொருளடக்கம்


ஓர் அரிசி - அருளரசு திருமுருக கிருபானந்த வாரியார்

மெய்ப்பொருள் நாயனார் - முனைவர் த. அமிர்தலிங்கம்

முசிறி அருள்மிகு பெரியநாயகி உடனுறை அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா

கீரனூர் அருள்மிகு சிவலோகநாதர் திருக்கோயில் - திருமதி இராஜேஸ்வரி விசுவநாதன்

சேக்கிழாரின் உள்ளீட்டுக் கற்பனை - முனைவர் இரா. செல்வ கணபதி

உயிரும் அதனைப் பேணுதலும் - 'சிவஞானச் சித்தர்' டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி

சிவலிங்கம் — யாவும் கடந்த கடவுள் வடிவம் - டாக்டர் சிவப்பிரியா

பக்தி வழி தந்தருளே - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

திருப்புகழ் யோகி வள்ளிமலை சுவாமிகள் - திருப்புகழ் தேனீ

கருணைக் கடவுளாம் கந்தன் - கவிஞர் சு.க. ஏகாம்பரம்

மூன்றெழுத்து மருந்து - திருமதி இந்திரா ஆராஅமுதன்

வில்லி நகராளும் செல்வியே கோதா! - ரங்கமணி பாட்டி, திருவரங்கம்

மாண்புடைய மங்கை - புலவர் ஏ. பரந்தாமன், எம்.ஏ. பி.எட்.





உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:


உயர்திரு ஆணையாளர் அவர்கள்

**திருக்கோயில்**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# ஓர் அரிசி

## - அருளரசு திருமுருக கிருபானந்த வாரியார்

ஆண்டவனை வழிபடுவதைக் காட்டிலும் அடியாரை வழிபடுவது சிறந்தது. ஆண்டவனை வழிபடுவோருக்கு ஒரு பலன். அடியாரை வழிபடுவோர்க்கு இரட்டைப் பலன். ஏன்? அடியார்கள் உள்ளக் கோயிலில் ஆண்டவன் உறைகின்றான். ஆதலின் அடியார் வழிபாடு உயர்ந்தது என்றுணர்க.

ஆண்டவனுக்குத் தந்த ஒன்று அடியார்க்குச் சேராது. அடியார்க்குத் தந்தது ஆண்டவனைச் சேரும். அஞ்சல் தலைமை நிலையத்தில் இட்ட அஞ்சல் அஞ்சல் பெட்டிக்கு வராது. அஞ்சல்பெட்டியில் இட்ட அஞ்சல் தலைமை நிலையத்துக்குச் சேர்ந்துவிடும். அஞ்சல் தலைமை நிலையம் இறைவன். அஞ்சல் பெட்டி அடியார்கள் என்றுணர்க.

''படமாடக் கோயில் பரமர்க்கொன் றீயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயின்
படமாடக் கோயில் பரமர்க்கங் காமே''

என்பார் திருமூலர்.

ஆண்டவனுக்குச் செய்யும்வழிபாடு ஆராதனை எனப்படும். அடியார்க்குச்செய்யும் வழிபாடு சமாராதனை எனப்படும். சம் ஆராதனை - சமாராதனை. சம்-நன்றாக, ஆராதனை - வழிபாடு. நன்றாக வழிபட்டது சமாராதனை.

ஆதலால், காதலால் அடியார்க்குச் செய்யும் வழிபாடு மிகமிகச் சிறந்த பயனை நல்கும்.

ஒரு சமயம் நான் பெருந் தனவந்தர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் மிகவும் இனிமையாகப் பேசி மிகவும் உபசரித்தார். 'ஐயா, உமக்கு இத் துணைப் பெருஞ் செல்வம் எவ்வாறு வந்தது?' என்று கேட்டேன். அத்தனவந்தர் செல்வ நலத்தால் மட்டும் சிறந்தவர் அன்று. கல்வி நலத்தாலும் சிறந்தவர். உடனே இரு வெண்பாக்களினால் எனக்கு விடையிறுத்தார்.


கட்டத் துணியற்றுக் காந்துபசிக் கன்னமற்
றெட்டி மரமொத் திருந்தயான் - ஒட்ட
எறும்பிற்கு நொய்யரிசி யிட்டேன் அதனால்
சிறிதுபொருள் ஈந்தான் சிவன்.

அப்பொருள்கொண் டீசன் அடியார்கட் கன்ன
மிட்டேன்
ஒப்புவமை யில்லான் உளமுவந்தே - இப்பார்
அளகேசன் என்றே அதிசயிக்கச் செல்வம்
அளவிலா தீந்தான் அவன்.

''உடுக்கத் துணியும் உண்ணச் சோறும் இன்றி எட்டி மரம் போல் வாழ்வு கசந்து இருந்த நான், வேறு ஒரு நற்பணியும் செய்ய இயலாது திகைத்து, எறும்பு வளைக்கு நொய்யரிசியிட்டு வந்தேன். அதனால் சிவபெருமான் சிறிது செல்வத்தை வழங்கியருளினார். சிவன் தந்த செல்வத்தைப் பாங்கியில் போடாமல் அப்பரமனுடைய அடியார்க்கு அன்னம் இட்டு வந்தேன். அதனால் அகம் மகிழ்ந்த அரனார் குபேரன் என்று என்னை எல்லோரும் மதிக்குமாறு அளவிறந்த செல்வத்தை வழங்கியருளினார். இது அவர் கூறிய விடை!

ஒரு கிராமத்தில் ஒரு கிழவி இருந்தாள். சூது வாது வஞ்சனை பொய் களவு முதலிய தீக்குற்றங்கள் அத்தனைக்கும் அவள் உறைவிடமாக இருந்தாள். தரும குணம் ஒரு சிறிதும் இல்லாத பொல்லாத கிழவி. அவள் வீட்டில் வாழும் எறும்புகளுக்கு நித்திய ஏகாதசி. ஒன்றையும் சிந்தமாட்டாள். எறும்பின் வாயில் ஒரு நொய்யைப் பார்த்தால் உடனே ஓடி அதை எடுத்துப் பானையில் போட்டுக் கொள்வாள். அவள் வீட்டில் சாப்பிட்ட இலை வெளியில் விழுந்தால் சாப்பிடாத இலை மாதிரி சுத்தமாக விழும். அதில் ஒரு துளிப் பசைகூட இராது. நாய்கள் வந்து பார்த்து ஏமாந்து போகும். நாம் செய்கின்ற வேலைகள் முழுவதையும் இந்தக் கிழவியே செய்துவிட்டாள் போலும் என்று பேசிக் கொள்ளும்.

பழைய சோற்றைப் பிசைந்து வடகம் போட்டுத் தின்பாள். கந்தல்களையெல்லாம் மடித்துத் தலையணையாக்கிப் போட்டுக் கொள்வாள். கோயிலுக்குப் போவாள். சுவாமி கும்பிடுவதற்கு அன்று, அங்கு யாராவது விட்டிருக்கும் பாதரட்சைகளை கவர்ந்து வரும் பொருட்டே, யாராவது பிச்சைக்காரர் அவளுடைய வீட்டுக்குச் சென்றால் சீறி விழுந்து கடிக்க வருவாள். அவர்கள் அப்படியே நடுங்கி ஓடி விடுவார்கள்.



அவள் வாயில் மறந்தும் தெய்வத் திருநாமம் வராது. அவள் சிந்தையில் கருணைக்கு இடமே இல்லை. கருணைக் கிழங்காகத்தான் போகும். அவளை அந்த ஊரில் அனைவரும் வெறுத்து ஒறுத் தார்கள்.

ஒரு நாள் காலை, கிழவி நடையில் அரிசி தீட்டிக்கொண்டிருந்தாள். ஒரு சிறந்த சிவனடியார் வந்து,

'அரஹர சிவசிவ அம்பல வாணா
பரம தயாபர வரத குணாளா'

என்று பாடிக்கொண்டு நின்றார். 'பாட்டி! ஒரு பிடி அரிசி போடு' என்றார்.

கிழவி, 'ஏய்! உனக்கென மமதை? எனக்கு என்ன வயது? எண்பதுதானே ஆயிற்று! பாட்டி என்கிறாய். பச்சை வெட்டுமருந்து சாப்பிட்டுப் பல் போய்விட்டது. தேன் பட்டு மயிர் நரைத்து விட்டது. இது என்ன தருமசத்திரமா? உனக்கென்ன கேடு? செக் குலக்கை மாதிரி இருக்கின்றாய் போ போ!' என்று விரட்டினாள்.

'பெரியம்மா! காதில் தங்கத்தால் செய்த பாம்பு வடம் போட்டிருக்கின்றாயே! கழுத்து நிறையத் தங்கச் சங்கிலி, இவையெல்லாம் ஏது! சிவன் தந்தது தானே! நான் பொன்னையும் பொருளையும் கேட்க வில்லையே! ஒரு பிடி அரிசி தானே யாசிக்கின்றேன்? அண்டாத் தொண்டையால், தகர டின் தட்டியதுபோல் கர்ச்சித்துப் பேசுகின்றனையே!

'பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை;
பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை
இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது என்று
கொடுக்கறியாது
இறக்கும் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி
ஏகம்பனே.

அவ்வளவுதான், கிழவிக்குப் பொங்கி எழுந்தது சீற்றம். ஆலகால விஷம்போல் கொதித்தாள். 'பிச்சைக் காரப் பயலே! என் வீட்டிலே வந்து இந்தத் தரித்திரம் பிடித்த மரணத்தைக் குறிக்கின்ற பாட்டைப் பாடு கின்றாயே!'' என்று வைது, அரிசி தீட்டுகின்ற உலக்கை யால் பத்திரகாளிபோல் அந்தச் சிவனடியாரை அடிக்க ஓங்கினாள்.

உலக்கையில் ஒட்டியிருந்த ஓர் அரிசி அவ ருடைய அட்சய பாத்திரத்தில் வீழ்ந்தது. அதனைக் கிழவி பார்க்கவில்லை. பார்த்திருந்தால் எல்லா அரிசி யும் என்னது என்று கொண்டிருப்பாள். அடியார் பிடித்தார் ஓட்டம்.

மற்ற வீடுகளுக்குச் சென்றார். சிறிது அரிசி கிடைத்தது. ஒரு மண்டபத்தில் அதைப் பொங்கி, தாம் வழிபடும் சிவலிங்கத்துக்கு நிவேதித்தார். பசியாறி னார். சிவயோகத்தில் அமர்ந்தார். சிவஞானிகள் இன் றிருந்த ஊரில் நாளை இரார். அவர் தலயாத்திரைக்குச் சென்றுவிட்டார்.

நாளடைவில் கிழவி கண்ணை மூடிவிட்டாள். கால தூதர்கள் அவளைக் கட்டிப்பிடித்து யாதனா சரீரத் துடன் கொண்டு போய் அறக்கடவுளுக்கு முன்னே நிறுத்தினார்கள்.

அறக்கடவுள் கடுகடுத்த முகத்துடன் 'சித்திர குப்தா, இவள் கணக்கை எடுத்துப் படி' என்று கட்டளை யிட்டார்.

சித்திரகுப்தன் கிழவியின் கணக்கை எடுத்துப் படித்தான். 'எல்லாம் பாவந்தான். புண்ணியமே இல்லை. எறும்பு வளையில் நெருப்பை இட்டாள். பெரியோரை நிந்தித்தாள். கோயில் உடைமைகளைக் கவர்ந்தாள். கண்ணில்லாதவர்களுக்குக் காலணாப்போட்டு நாலணா எடுத்துக்கொண்டாள். சிவராத்திரி சஷ்டி ஏகாதசி முதலிய விரத நாள்களில்கூடத் தலையணைக்குப் பஞ்சடைக்கின்ற மாதிரி வயிறு புடைக்கத் தின்றாள். பேசிய யாவும் பொய். ஒரு நாள் ஒரு மகானை உலக்கையால் அடிக்கச் சென்றாள். உலக்கையில் ஒட்டிய ஓர் அரிசி அவருடைய கரத்தில் இருந்த அட்சய பாத்திரத்தில் வீழ்ந்தது. அந்த ஓர் அரிசி சிவநிவேதன மாகி அச்சிவயோகியார் திருவயிற்றில் சேர்ந்தது. இந்த ஒன்றுதான் இவள் வாழ்நாளில் செய்த புண்ணியம். அதுவும் அபுத்தி பூர்வமாகச் செய்தது' என்றான்.

அறக்கடவுள் ''நல்வினை அபுத்தி பூர்வமாகச் செய்தாலும் நன்மை பயக்கும். 'தான் சிறிதேயாயிடினும் தக்கார்கைப் பட்டக்கால், வான் சிறிதாப் போர்த்து விடும்.' நெருப்பைத் தெரியாமல் மிதித்தாலும் சுடுந் தானே? ஆதலால் இந்த ஓர் அரிசிக்கு என்ன நலத்தை நுகர வேண்டும். பார்த்துச் சொல்'' என்றார்.

சித்திரகுப்தன், ''அண்ணலே, அந்த ஓர் அரிசி அடியாரின் திருவுதரத்தில் வீழ்ந்தபடியால் திருக் கயிலாய மலையிற் சென்று சிவபெருமானைத் தரிசிக்க வேண்டும்'' என்றார்.

அறக்கடவுள், 'புண்ணியம் கடுகளவு, பாவம் மலையளவு, சூசிகடாக நியாயப்படி முதலில் புண் ணியத்தை நுகரட்டும், பிறகு பாவங்களை நுகரச் செய் யுங்கள், கிழவியின் பாவங்களுக்காக நரகில் இட்டு வாட்டி வருத்துங்கள். கிழவியின் வாயிலே தீயை வைத்துச் சுடுங்கள். கொதிக்கின்ற எண்ணெயில் இட்டுப் பொரியுங்கள்'' என்றார்.

நமனுடைய தமர்கள் கிழவியைப் பாசக் கயிற்றால் நன்றாகப் பிணித்துக் கொண்டு போய்த் திருக்கயிலாயத்தில் சிவசந்நிதியில் நெடுந்தொலை வில் நிறுத்தினார்கள்.

'கிழவி' அதோ பார், சிவபெருமான்!''

பவளக் குன்று போன்று கோடிச் சந்திரப் பிரகாசமாம் வேத மந்திர பீடத்தில் வீற்றிருக்கும் சிவ மூர்த்தியையும், இடப் பாகத்தில் மரகதக் கொடிபோல் வீற்றிருக்கின்ற இமயவல்லி அம்மையையும், இடை யில் கனகச் சிறு குன்றுபோல் களி நடம் புரியும் கந்த வேளையும் கண்டாள் கிழவி. அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சிந்தியது.

''அப்பா எமதூதர்களே! உங்களுக்கு ஒரு கோடி வணக்கங்கள். ஓர் அரிசிக்கு இத்துணைப் புண்ணியம் வரும் என்று பாவியாகிய எனக்குத் தெரியாமல் போய்விட்டது. அந்தோ! என் வீட்டில் குதிர் நிறைய நெல்லும் பல மூட்டைகள் அரிசியும் நெய்யும் பாலும் முந்திரிப் பருப்பும் பாதாம் பருப்பும் டப்பாடப்பாவாக இருந்தன. அத்தனையும் இப்போது எனக்கு உதவ வில்லை. பெட்டி நிறைய பணம் வைத்திருந்தேன். வட்டிமேல் வட்டி வாங்கினேன். பெட்டி மேல் பெட்டி அடுக்கினேன். எல்லாம் அங்கேயே நின்றுவிட்டன. அடியாரிடம் சேர்ந்த ஓர் அரிசிதான் இங்கு உதவு கின்றது. இத்துணைப் புண்ணியம் வரும் என்று யாரும் எனக்கு விவரமாகச் சொல்லவில்லை. சொல்லியிருந் தால் என் வீடு தேடி வந்த அடியார்க்கு இருக்கை யிட்டுப் பாலும் நெய்யும் அன்னமும் சொர்ணமும் அள்ளி வழங்கியிருப்பேன். சண்டாளியாகிய நான் கிள்ளிக்கூடத் தந்தேன் இல்லை. வாழ்நாள் முழுவதும் வீழ்நாளாகக் கழித் தேனே! போற்றாதே ஆற்றா நாள் போக்கினேனே! அப்பா, நீங்கள் நல்ல உத்தமர்கள். தேவருக்கும் மூவருக் கும் காணக் கிடைக்காத கண்ணுதற் கடவுளைக் கண் ணாரக் கண்டேன். ஆனந்தம் கொண் டேன். கடவுளைக் கண்டு கைகூப்பித் தொழவில்லை யானால் மேலும் பாவந்தானே! உங்களைத் தலை யினால் வணங்கு கின்றேன். சிறிது கட்டை அவிழ்த்து விடுங்கள். கை கூப்பிக் கும்பிடுகின்றேன். பிறகு என்னைக் கட்டிக் கொண்டு போய் எரிவாய் நரகில் இருத்துங்கள்'' என்று மிக மிக நடுங்கிய குரலுடன் இனிமையாக கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

இரக்கமே அறியாத எமதூதர்களின் உள்ளம் சிறிது உருகிறது. 'குடலறுந்த குறுநரி எங்கே போகும்?' என்று கருதிச் சிறிது கட்டை அவிழ்த்து விட்டார்கள்.




''தேவதேவா! மஹாதேவா! தீனரட்சகா! கருணைக் கடலே! ஏழை பங்காளா! அருட்பெருஞ் சோதி! அப்பனே! சிறியேன் அறியாமையால் வல் வினைகளைச் செய்துவிட்டேன். அத்தனையும் பொறுத்து ஏழையைக் காத்தருள், காலதூதர்கள் இரும்புச்சம்மட்டி யால் அடிப்பார்களாமே! கும்பி நோக நரகில் தள்ளிச் சித்திரவதை செய்வார்களாமே! தாண்டவம் புரியும் ஆண்டவனே! வேண்டியவர்களுக்கு அருளும் தயா நிதியே! என்னை விரட்டியடிக்காமல் காத்தருள். குழந்தைகள் செய்த குற்றங்களுக்கு அம்மையும் அப்ப னும் தண்டிக்கலாம். தெருவில் போகும் பயில்வானை விட்டுத் தண்டிக்க மாட்டார்களே! எமனிடம் கொடுத்து என்னைத் தண்டிக்காதே!'' என்று கூறி அழுதாள்; தொழுதாள்.

கருணாநிதியாகிய கண்ணுதற்பெருமான் அவள் மீது கருணை மழை பொழிந்தார். 'அஞ்சேல்' என்று அபயம் அளித்தார்.

கிழவி சிவபெருமான் திருவடியின் அருகில் நிமிர்ந்து அமர்ந்தாள்.

இத்தனையும் கண்ட காலதூதர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். 'கிழவி, வெளியே வா' என்று அழைத் தார்கள். கிழவி, 'வரமுடியாது, போங்கள்' என்றாள்.

காலதூதர்கள், 'எம்பெருமானே! கிழவியைத் துரத்தி அனுப்புங்கள். இவள் கொடிய பாவி நரகில் தள்ளி இவளைத் தண்டிக்க வேண்டும்' என்றார்கள்.

சிவபெருமான், 'காலதூதர்களே! விண்ணளவு அடுக்கிய பஞ்சுப் பொதி, பொறி நெருப்பினால் எரிந்து கரிந்து சாம்பாரானாற்போல இவளுடைய பாவங்கள் யாவும் என்னைத் தீண்டியவுடனே நீறாகிவிட்டன. இவளை நாம் மன்னித்து அருள் புரிந்தோம். நீங்கள் உங்கள் உலகுக்குச் செல்லுங்கள்'' என்று அருளிச் செய்தார்.

காலதூதர்கள் 'ஐயனே, எங்கள் தலைவனுக்கு என்ன சொல்வது?'' என்றார்கள்.

சிவபெருமான் ''மார்க்கண்டேயர் வரலாற்றை நினைவுபடுத்துங்கள்'' என்றார்.

காலதூதர்கள் மறைந்து நமனுலகம் போய் நடுங்கி அக்கடவுளுக்கு முன் நின்றார்கள்.

அறக்கடவுள், 'எங்கே கிழவி?'' என்று கேட் டார். அவர்கள் நிகழ்ந்ததைக் கூறினார்கள்.

அறக்கடவுள் இறைவனுடைய கருணைத் திறத்தையும் அடியார் திருவயிற்றில் வீழ்ந்த ஓர் அரிசி செய்த விந்தையையும் நினைந்து அதிசயம் அடைந் தார்.

★★★

# மெய்ப்பொருள் நாயனார்

– முனைவர் த. அமிர்தலிங்கம்

''பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்''

என்று அண்மைக் காலத்தில் வாழ்ந்தவரான அமர கவி பாரதியார் நமக்கு அறிவுறுத்தினார்.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்''.

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே பாடினார் பொய்யாமொழிப்புலவர் வள்ளுவர். இச்சான்றோர்கள் வாக்கிற்கிணங்க சிறந்து விளங்கிய ஒரு நாயனார்தாம்.

''வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக்கடியேன்''

என்று சுந்தரரால் போற்றப்பட்ட மெய்ப்பொருள் நாயனார்.

சிவ வேடத்திற்குச் சிறப்பு தந்து சிவனடியார் களைப் போற்றி வளர்க்க வேண்டும் என்ற இலட்சியத் திற்காகத் தம் இன்னுயிரையே தந்து தம் அருள் உள்ளத் தால் தம்மைக் கொன்றவரையும் கைதொழுதுவென்ற வரான இந்நாயனாரின் சரிதம் வேதத்தினும் விழுமிய சரிதமாகும். பழிக்குப்பழி இரத்தத்திற்கு ரத்தம் என்று வன்முறைகளால் சீரழிந்துவரும் இன்றைய சமுதாயத் திற்கு அருள் நெறியின் மகத்துவத்தைப் போதிக்கும் இச்சான்றோரின் வரலாறு சிறந்த நன் மருந்தாகத் திகழும் என்பது திண்ணம்.

திருக்கோவலூர், சிவபெருமானின் அட்ட வீரட் டத்தலங்களுள் ஒன்று. சிவபெருமான் அந்தகாசூரனை வென்றது இத்திருக்கோவலூர் திருத்தலத்திலேயே ஆகும். திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் இத் தலத்தைப் பாடியுள்ளனர். இத்தகைய தொன்மைச் சிறப்பு மிக்க திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்ட சேதிநாட்டை மலாடர் கோமான் ஆகிய மெய்ப்பொருள் நாயனார் ஆண்டுவந்தார். இவருடைய பரம்பரையே மாதொரு பாகராம் சிவபெருமானுக்கு வழிவழி அன்பு செய்து வந்த சைவப் பரம்பரையாகும். மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார்களிடத்தில் அன்புபூண்டு அவர்கள் கருத்தின்வழி ஏவல் செய் வதையே பெரும் பாக்கியமாகக் கருதித் தொண்டாற்றி வந்தவர் ஆவார்.

மெய்ப்பொருள் நாயனார் அறநெறி வழாமல் தம் அரசைப் பாதுகாத்து வந்தார். தம்முடைய தோளாற்ற லால் பகைவர்கள் பலரையும் அவர் வெற்றி கண் டுள்ளார். நீதி நேர்மை மிக்க அவர் எப்பொழுதும் வந்தித்து இருப்பது சிவன் திருப்பாதம். எப்பொழுதுமே சிந்தித்திருப்பது சிவனடியார்க்கு ஆற்றிடும் திருத் தொண்டு.

தம்முடைய செல்வம் அனைத்தையும் சிவனார் ஆலயப் பூசைக்கும், சிவனடியார் பாத சேவைக்குமே அவர் செலவழித்துவந்தார். இத்தகைய மெய்ப்பொருள் நாயனாரின் மெய்யான சிவத்தொண்டைச் சேக்கிழார் பாராட்டிப் போற்றுகிறார்.

''மங்கையைப் பாக மாக
உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி
ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப்
போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள் நாயகருக்கு அன்பர்
தாளலால் சார்வொன் றில்லார்''

''தேடிய மாடு நீடு
செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்
காவன ஆகும் என்று
நாடிய மனத்தினோடு
நாயன்மார் அணைந்தபோது
கூடிய மகிழ்ச்சி பொங்கக்
குறைவறக் கொடுத்து வந்தார்''

எனவரும் பாடல்களில் மெய்ப்பொருள் நாயனாரின் சிவத் தொண்டினைச் செம்மையுற விளக்கியுள்ளார் சேக்கிழார்.

சிவவேடம் பூண்ட சிவனடியாரைச் சாதாரண அடியாராக எண்ணாது அவர்களையும் நாயனாராகவே மதித்து வணங்கி அவர்களுக்கு வேண்டுவன எல்லாம் வழங்கி உவந்தது மெய்ப்பொருள் நாயனாரின் உள்ளம். ஆகவே தான் மேற்காட்டிய பாடலில் சிவனடியார்களை அடியார் எனக் காட்டாமல் சேக்கிழார் ''நாயன்மார் அணைந்தபோது'' என்று மெய்ப்பொருள் நாயனாரின்

உள்ளம் எவ்வாறு உணர்ந்ததோ அவ்வாறே ''நாயன்மார் அணைந்த போது'' என்று சுட்டிக் ''கொடுத்து வந்தார்'' ''கொடுத்து உவந்தார்'' எனவும் பொருள் கொள்ளத்தக்க வகையில் சொற்களைப் பெய்து கவிகளை வடித்திருக்கக் காண்கிறோம்.

இத்தகைய உத்தமராம் மெய்ப்பொருள் நாயனாருக்கு ஒரு பகைவன் வாய்த்திருந்தான். அவன் பொய்ப் பொருளை நாடும் பித்தன்; மெய்ப்பொருளாரின் மெய்ப்புகழைக் காணச் சகியாத எத்தன்; அவனும் திருக்கோவலூருக்கு அருகிருந்த ஓர் ஊரை குதிரை, யானை, காலாள் படைகளோடு ஆண்டிருந்த ஒரு சிற்றரசன்தான். அவன் மெய்ப்பொருள் நாயனார் மீது பலமுறை படை திரட்டி வந்து போர் புரிந்திருக்கிறான். ஆனால் சிவனடியார்கள் பால் ஈரமும், மாற்றார்களை வெல்லும் மாவீரமும் கொண் டிருந்த மெய்ப்பொருளாரை வெற்றி கொள்ள அவனால் இயலவில்லை. பலமுறையும் வரைநெடுந்தோள் கள் கொண்ட மெய்ப்பொருளாரிடம் அவன் தோற்று அவமானப்பட்டு ஓடிப்போய்விட்டான். இப்படி வீரத்தால் மெய்ப்பொருளாரை வெற்றி கொள்ள முடியாத முத்தநாதன் என்ற அந்தவஞ்சகன், சிவனடியார்களுக்கு மெய்ப்பொருளார் அளிக்கும் மரியாதையைப் பயன்படுத்திப் படைகொண்டு சாதிக்க முடியாததை சிவனடியாரின் உடைபூண்டு சாதித்து விட சதித்திட்டம் ஒன்றைத் தன் மனதிற்குள் தீட்டிக் கொண்டான்.

திருவெண்ணீறு சாத்தும் சிவனடியார் வேடம் பெருமைகள் யாவும் சேர்க்கும் பெருவேடமாகும். அப்பெருவேடத்தைச் சிறுமதியாளனாகிய முத்த நாதன் பூண்டு கொண்டுவிட்டான்.

''மெய்யெல்லாம் நீறு பூசி
வேணிகள் முடிந்து கட்டிக்
கையினுள் படைக ரந்த
புத்தகக் கவுளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன
மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடம் கொண்டு
புகுந்தனன் முத்த நாதன்''

என்று முத்தநாதன் பொய்தவ வேடம் பூண்டமையைச் சேக்கிழார் பாடுகின்றார்.

திருநீறு அணியாத நெற்றி பாழ் என்பது பழமொழி. உண்மை அன்புடன் அணிவாரின் ஆணவம்,

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்ன சிவகதி தானே.

– திருமூலர்

மாயை, கன்மம் ஆகிய மும்மலங்களையும் சுட்டு நீறுபடுத்துவதால் திருநீற்றிற்கு அப்பெயர் வந்தது.

''கங்காளன பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே''

என்று திருநீறு அணிவதனால் உண்டாகும் பலன்களைத் திருமூலர் கூறியுள்ளார். வினைகளை நீறு படுத்துவதாகிய திருநீற்றை உடலில் பதினாறு அல்லது பன்னிரண்டு இடங்களில் மூன்று கீற்று வடிவமாக வேனும் (திரிபுண்டரிகம்) அல்லது பரவவேனும் (உத்தூளனம்) பூச வேண்டும் என்பது விதி. வினைகளைப் போக்க வல்ல திருநீற்றினை முத்தநாதன் மெய்யெலாம் பரவப் பூசிக் கொண்டுவிட்டான். அவ்வாறு பூசிய அளவிலேனும் அவனுடைய உள்ள மாசு நீங்கியதா எனில் நீங்கிடவில்லை. நஞ்சே வடிவமான முத்த நாதனின் மனத்தைப் பக்குவம் செய்திட இன்னும் அவன் பலகாலும் திருநீறு பூசியாக வேண்டும்.

தீபத்தை ஏற்றும்போது அத்தீபச் சுடர் அறை முழுதும் உள்ள இருளை அகற்றினாலும் கூட, தான் எரியும் திரியின் கீழுள்ள இருளை அகற்ற அதனால் ஆவதில்லை அல்லவா! அவ்வாறே முத்தநாதன் பூசிக் கொண்ட திருநீறும், கட்டி முடித்துக் கொண்ட சடா முடியும் காண்பார் மனமாசைப் போக்குவன போல் சுடர் கொண்டு திகழ்ந்திட்ட போதும், அவன் கொண்ட வேடம் அவனுடைய மன அழுக்கை அகற்றவில்லை; எதைப்போல என்றால் ''மை பொதி விளக்கு போல்'' என்று உவமை கூறுகிறார் சேக்கிழார். மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்லும் தீய எண்ணத்தோடு ஆயுதம் மறைத்து வைத்திருக்கும் புத்தகத்தைக் கையினில் ஏந்தியவனாகப் பொய்யான தவ வேடம் பூண்டுத் திருக் கோவலூருக்குள்ளே புகுந்துவிடுகிறான் முத்தநாதன்.

சிவனடியார் எந்நேரமும் தம்மைக்காணத் தடையின்றி வருமாறு ஆணை பிறப்பித்திருந்தார் மெய்ப்பொருள் நாயனார். ஆகவேதான் பொய் தவ வேடம் பூண்ட முத்தநாதனும் தடையின்றித் திருக்கோவலூர் நுழையவும், எங்கும் தடையின்றி அரண்மனைக்குள் நுழையவும் அதற்குப் பிறகு அரசன் உறங்கிக் கொண்டிருக்கும் அந்தப்புரத்திற்கே வரவும் எளிதாக அவனுக்கு முடிகிறது. சிவனடியார்களைச் சிவபெருமானாகவே மதித்தார் மெய்ப்பொருள் நாயனார். ஆகவேதான் முத்தநாதன் சிவ வேடம் பூண்டுவர அவனையும் கூட ''உடையவர்தாமே வந்தார் உள்ளெழுந்தருளும்'' என்று தடையின்றி அரண்மனைக்குள் நுன்ழய அனுமதித்து விடுகிறார்கள் காவலர்கள்.

மெய்ப்பொருள் நாயனாரின் அந்தப்புரத்தைக் காவல் செய்து நிற்பவன் தத்தன். இவன் மெய்ப்பொருள் நாயனாரின் குறிப்பறிந்து செயல்படக்கூடிய மெய்க் காவலன் ஆவான். குறிப்பில் யாரையும் உணரக் கூடிய தத்தன், தவவேடம் பூண்டு வந்திருக்கும் முத்த நாதனையும் கூட அவன் முகக் குறிப்பிலிருந்தே ஐயத் திற்கிடமானவனாகத் தெரிந்து கொண்டுவிடுகிறான். ஆகவே அவனைத் தடுத்து ''அரசர் உறங்கக்கூடும், சமயம் பார்த்துச் செல்ல வேண்டும்'' என்று கூறுகிறான். இவ்வாறு தத்தன் தடுத்தும் கேளாத முத்தநாதன் ''நான் அரசருக்கு மெய்ப்பொருளை உரைக்கச் செல்கிறேன். நீ தடுக்காமல் இங்கேயே நில்'' என்பதாகத் தத்தனைத் தள்ளிக்கொண்டு அந்தப்புரத்துக்குள்ளும் நுழைந்து விடுகிறான்.

மெய்ப்பொருள் நாயனாரின் அருகிலேயே அரசியாரும் அமர்ந்து பாதசேவை புரிந்துகொண்டு இருக்கிறார். சிவனடியாரைக் கண்ட வுடன் அரசியார் வேகமாகக் கட்டிலைவிட்டுக் கீழிறங்கி, அரசரையும் எழுப்புகிறார். அந்தப்புரத்திற்குள் நுழைந்த சிவனடியாரைக் கண்டதும் கதுமென அரசியார் கட்டிலில் இருந்து எழுவதும், அடியாரை யார் எவர் என விசாரியாமலே அரசரை எழுப்பு வதும் மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார்களுக்குத் தந்திருக்கும் பெருமதிப்பினையே நமக்குப் புலப்படுத்துகின்றன. கணவனார் கருத்தறிந்து செயற்படும் கற்புக்கரசியான தேவியாரின் குணச் சிறப்பையும் கூட இந்நிகழ்ச்சியால் அறிகிறோம்.

அரசியார் எழுப்ப எழும் மெய்ப்பொருள் நாயனார் சிவனடியாரைக் கண்டதும் மகிழ்ச்சி மிகக் கொண்டவராய் ''அண்டர் நாயகனார் தொண்டராம்'' என உரைத்தவாறு தமது செங்கைகளைக் குவித்து வணங்கி வழிபடுகிறார்.

> அரகர என்ன அரியதொன் றில்லை
> அரகர என்ன அறிகிலர் மாந்தர்
> அரகர என்ன அமரரும் ஆவர்
> அரகர என்ன அறும்பிறப் பன்றே.
>
> - திருமூலர்

''மங்கலம் பெருக மற்றென் வாழ்வு வந்தணைந்த
தென்ன இங்கெழுந் தருளப் பெற்ற தென் கொலோ''

என்று கூறியும் வரவேற்கிறார் மெய்ப்பொருள் நாயனார். ''என் வாழ்வில் மங்கலம் மேலும் வந்து கூடிற்று'' என்று மெய்ப்பொருள் நாயனார் கூறி முத்தநாதனை வரவேற்கிறார். முத்தநாதனால் அவருடைய மங்கலம் மிக்க வாழ்வு முடியவே போகிறது அல்லவா! அதனாலே சேக்கிழார், மெய்ப்பொருள் நாயனாரின் வாழ்வு முடியப்போகிறது என்பதையும் நமக்குக் குறிப்பில் உணர்த்துவதற்காக ''வாழ்வு வந்து அணைந்தது'' (நீங்கியது) எனப்பொருள் கொள்ளும் வகையில் பாடியிருக்கும் நயமும் இங்கே நாம் உணர்தற்குரியது.

இப்படி மெய்ப்பொருள் நாயனார் அகம் மகிழ்ந்து வரவேற்க தவவேடத்தில் இருந்த முத்தநாதன் ''உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகமநூல் மண்மேல் எங்கும் இல்லாததொன்று கொண்டு வந்தேன், இயம்ப'' என்று கூறுகிறான். சிவபெருமான் மெய்ப்பொருள் நாயனார்க்கே உரிய நாயகன்; போலி வேடம் பூண்டிருக்கும் தனக்கு நாயகன் இல்லை என்பதாலே ''உங்கள் நாயகனார்'' என்று முத்தநாதன் உரைக்கக் காண்கிறோம். எங்கள் நாயகனார் என்று அவன் கூறாமல் ''உங்கள் நாயகனார்'' என்று உரைத்தமையால் அவனுடைய வேடத்தில் தான் சிவம் இருந்ததே தவிர அவனுடைய உள்ளத்தில் இல்லை என்பதை அவனே ஒப்புக் கொண்டு உரைத்து விடுவதையும் காண்கிறோம். ஆனாலும் மெய்ப்பொருள் நாயனார் முத்தநாதனின் வேடத்தில் எப்படி ஐயம் கொள்ளவில்லையோ, அப்படியே அவனுடைய வார்த்தையிலும் கூட ஐயம் ஒன்றும் கொள்ளாமல் ''நாயகனார் உரைத்த ஆகம நூலின் பொருளை எனக்கு

அறிவிக்க வந்தீர்களா? இதைக் காட்டிலும் எனக்கு வேறு பேறு என்ன இருக்க மடியும்? இப்பொழுதே எனக்கு எம்பிரான் அருள்செய்த ஆகமத்தை வாசித்து அருள் செய்ய வேண்டும்'' என்று பணிந்து வேண்டுகிறார். அதற்கு பொய்த்தவ வேடம் பூண்டவனான வஞ்சநாதன்

''நாறுபூங் கோதை மாது தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருக்க வேண்டும்''

என்று கூறுகிறான். அரசி அவ்விடத்தைவிட்டு அகல வேண்டும் என்பதையே முத்தநாதன் இத்தொடரால் கூறியிருக்கிறான். சேக்கிழார் தம்புலமைத்திறத்தால் ''வாசனை மிக்க மலர்களை இனி அரசி அணிந்து கொள்வது தவிரப்போகிறது, நானும் உன்னைக் கொன்று நரகமாகிய ஓரிடத்தை அடைந்துவிடுவேன். சிவலோகமாகிய வேறிடத்திற்கு நீரும் சென்றுவிடப் போகிறீர்'' என்று மெய்ப்பொருள் நாயனாரிடம் உரைப்பதைப்போல இருபொருள் படுமாறு இத்தொடரை அமைத்திருக்கும் நயமும் இங்கே எண்ணி மகிழ்தற் குரியது.

முத்தநாதன் வேண்டிக் கொண்டபடியே, திரு மகளை ஒத்த அரசியாரை அகலுமாறு மெய்ப் பொருள் நாயனாரும் கூற, கணவன் சொல்லுக்கு மாறுகூறி அறியாத அரசியும் உடன் அவ்விடத்தை விட்டு அகன்று விடுகிறார். முத்தநாதனை உரிய ஆசனம் தந்து அமரச் செய்யும் மெய்ப்பொருள் நாயனார், தாம் தரைமேல் அமர்ந்தவராய் ''இனியருள் செய்யுங்கள்'' என்று வேண்டு கிறார். உடனே முத்தநாதனும் புத்தகத்தைத் திறப்பதை போலத் திறந்து அதற்குள் மறைத்து வைக்கப்பட் டிருக்கும் படைக்கருவியை எடுத்து வணங்கி நின்றிருக் கும் மெய்ப்பொருள் நாயனார் வயிற்றில் அதனைப் பாய்ச்ச, அப்பொழுதும் மெய்ப்பொருள் நாயனார் ''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்'' என்று சிவ னடியாரை வணங்கித் தொழுகிறார்.

''கைத்தலத் திருந்த வஞ்சக் கவுளிகை மடிமேல்
வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர்
வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைத்த அப்பரிசே
செய்ய
மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத்
தொழுது வென்றார்.''

என்கிறார் சேக்கிழார். முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்ல விழைந்து ஊருக்குள் நுழைந்த போது அவனுடைய தீய நோக்கத்தைக் கூறமுற்பட்ட போதும் ''இகலினால் வெல்ல மாட்டான் அற்றத்தில் வெல்வான் ஆக'' என்று அமங்கலச் சொற்பெய்த லின்றிச் சேக்கிழார் அவன் நோக்கத்தைச் சுட்டினார். முத்தநாதன் மெய்ப் பொருள் நாயனாரைக் குத்தி விட்டதைக் கூறும் இப்போதும் ''தான் முன் நினைத்த அப்பரிசே செய்ய'' என்று அமங்கலச் சொல் இன்றிச் சுட்டியிருக்கும் சிறப்பு எண்ணி எண்ணிப் போற்றுத லுக்குரியதாகும். மேலும் மெய்ப்பொருள் நாயனார் முத்தநாதனுக்குத் தோற்றிடவில்லை, அவனுக்குத் தம் இன்னுயிரைக் கொடுத்து வென்றுவிட்டார். மடிந்து விழுந்தபோதும் ''நீங்களுமா சிவனடியார்?'' என்று சிவனடியாரை மனதாலும் நொந்துகொண்டு விடாமல் ''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என்று தொழுது வென்றார்'' என்று பாடியிருப்பதைக் காணும் போது அவர்தம் பண்பின் உயர்வைக் கண்டு நாமும் பூரிக் கிறோம்.

முத்தநாதன் அந்தப்புரத்திற்குள் நுழையும் போதே தத்தன் என்ற மெய்க்காப்பாளன் ஐயம் கொண் டான் என்பதைப் பார்த்தோம். அவன், சிவனடியார் உள்ளே நுழைந்தபிறகும் சிவனடியாரால் அரசருக்கு ஆபத்து ஏதேனும் உண்டாகுமோ என்று சந்தேகத் துடனேயே இருந்திருக்கிறான். தான் கொண்ட ஐயத் திற்கு இணங்கவே சிவனடியார் மறைத்திருந்த கொலைக்

## அரச மரத்துப் பிள்ளையார்

*அரசமரமும் வேப்பமரமும் சேர்த்து வைக்கப் பெற்று அம்மரங்களின் அடியிலிருக்கும் பிள்ளையாரே மிகவும் சிறந்தவராகக் கருதப்படுகிறார். அம்மரங்கள் விநாயகருக்கு நிழல் தருவதற்காக மட்டும் வைக்கப் பட்டவை அல்ல. வழிபடும் பக்தர்களுக்கும் அவை நிழல் தந்து ஆதரிக்கின்றன. அவை மருந்தாகவும் உதவுகின்றன.*

*கதிரவன் தோன்றும் காலைநேரத்தில் குளித்து ஒரு குடத்தில் அல்லது செம்பில் நீர் கொண்டு சென்று அரச மரத்தடியில் உள்ள அப்பிள்ளையாரை முழுக் காட்டி ஒரு சிறு அறுகம் புல்லை அவர் முடிமேல் வைத்து அவரை அம்மரங்களோடு சுற்றிவரும் அடியார் களுக்கு உடலிலுள்ள நோய்கள் எல்லாம் பறந்தோடும் படி அங்குள்ள காற்றே செய்துவருகிறது. கருப்பைக் கோளாறினால் கரு தரிக்காமல் வாடும் பெண்கள் காலையில் அக்காற்றை உட்கொள்ளும்போது கருப் பையிலுள்ள தீயபுழுக்கள் அழிந்துபின் கருத்தரிக்க வழி உண்டாகிறதென்று மருத்துவ நூல்கள் கூறு கின்றன.*

கருவியை எடுத்து முடிக்கக் காணும் தத்தன், தன் உடை வாளை ஓங்கியவாறு முத்தநாதனை வெட்ட ஓடிவரு கிறான். அப்பொழுது இரத்தம் சோர தரைமேல் வீழ் கின்ற மெய்ப்பொருள் நாயனார் ''தத்தாநமர்'' (தத்தா! இவர் நம்மவர் என்பது பொருள்) என அவனைத் தடுத்துத் தரையில் வீழ்கிறார்.

''மறைத்தவன் புகுந்த போதே
மனம் அங்கு வைத்த தத்தன்
இறைப் பொழு தின்கட்கூடி
வாளினால் எறிய லுற்றான்

நிறைத்த செங்குருதி சோர
வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில் ''தத்தா
நமர்'' எனத் தடுத்து வீழ்ந்தார்''

முத்தநாதன் வயிற்றில் வாளைப் பாய்ச்சியது கூட மெய்ப்பொருள் நாயனாரை மனம் நோகச் செய்ய வில்லையாம். தன்னை நாடிவந்திருக்கும் சிவனடி யாரை வெட்ட வாளோங்கிய தத்தன் செயல்தான் மெய்ப்பொருள் நாயனாரை மிகுந்த மன வேதனைக் குள்ளாக்கியது என்பதைக் குறிப்பிடுகிறார் சேக்கிழார்.

வேதனை எய்தி வீழ்ந்த
வேந்தரால் விலக்கப்பட்ட
தாதனாம் தத்தன் தானும்
தலையினால் வணங்கித் தாங்கி
யாதுநான் செய்கேன் என்ன
எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம்
கொண்டுபோய் விடுநீ என்றார்''

என்பது சேக்கிழார் காட்டும் அடுத்த பாடல். முத்த நாதனை வெட்டப் போன தன் செயல் அரசரை மிகுதி யும் மனவருத்தத்திற்கு ஆளாக்கி விட்டது என்பதை யும் தத்தன் புரிந்து கொண்டு விடுகிறான். ஆகவேதான் மீளவும் முத்தநாதனை வெட்ட வாளினை அவன் ஓங்கிடாமல் தரையில் விழப்போகும் மெய்ப்பொருள் நாயனாரைத் தான் தாங்கி ''இப்பொழுது நான் என்ன செய்வது?'' என்ற அரசரை வினவுகிறான். மெய்ப் பொருளாரும் ''சிவபெருமானின் அடியார் எந்தத் தீங்கும் இன்றி பத்திரமாக வெளியேறும் வண்ணம் நீயே கொண்டுபோய் விட்டுவா'' என்று தத்தனுக்கு ஆணையிட, பொய்தவ வேடதாரியான முத்தநாத னுக்குக் காவலாகத் தத்தனே உடன் போகிறான்.

இதற்குள் மெய்ப்பொருள் நாயனார் போலி சிவனடியார் ஒருவரால் குத்தப்பட்ட செய்தி நகரில் வேகமாகப் பரவ அரசரைக் குத்திய முத்தநாதனைக் கொல்ல ஏராளமான மக்களும் படையினரும் திரண்டு வருகிறார்கள். ஆனால் தத்தனோ ''இவன் பத்திரமாகச் செல்லவேண்டும் என்பது அரசரின் கட்டளை'' என்று கூற, முத்தநாதனைத் தண்டிக்காமல் எல்லோரும் அவனை அரசன் விரும்பியவாறே பத்திரமாக நாட்டை விட்டு வெளியேற அனுமதித்து அரசன் ஆணைக்கு அஞ்சி ஒதுங்கிச் சென்று விடுகின்றனர்.

தத்தன் அரண்மனை திரும்பும் வரையில் மெய்ப் பொருள் நாயனாரும் தம் உயிரைத் தாங்கியவாறு காத்து இருக்கிறார். சிவனடியார் பத்திரமாகச் சென்றார் என்பதைக் கேட்க வேண்டி சோர்கின்ற ஆவி தாங்கும் கொற்றவன் முன்பு, கோமகன் குறிப்பில் நிற்கும் தத்தன் சென்றான் என்று கூறுகிறார் சேக்கிழார். பத்திரமாகச் சிவனடியார் சென்றுவிட்டார் என்பதைத் தத்தன் கூற மெய்ப்பொருள் நாயனார் எவ்வாறு மகிழ்ச்சி கொண் டார் என்பதையும் சேக்கிழார்

''சென்றடி வணங்கி நின்று
செய்தவ வேடம் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி
விட்டனன் என்று கூற
இன்றெனக்கு ஐயன் செய்தது
யார்செய்ய வல்லார் என்று
நின்றவன் தன்னை நோக்கி
நிறை பெருங் கருணை கூர்ந்தார்''

என்று பாடியிருக்கிறார்.

யாரோ ஒருவர் சிவனடியார் வேடம் பூண்டு தமக்கு இன்னல் செய்துவிட்டார் என்பதனால் பெருமை மிக்க சிவவேடத்தைச் சிறுமைப்படுத்தும் சிறிய செயலை மெய்ப்பொருள் நாயனார் செய்திட விரும்ப வில்லை. மேலும் சிவபெருமானின் திருவருள் விருப் பத்தினால்தான் சிவனடியார் வேடம் பூண்ட ஒருவரால் தம்முயிர் நீங்கப்பெறும் இச்செயலும் நிகழ வேண்டும் என்பதும் மெய்ப்பொருள் நாயனாரின் அசைக்க முடியாத நம்பிக்கை. பொன் பொருளை விரும்பும் அடியார்களுக்கு எவ்வாறு அவற்றை உவப்போடு வழங்க மெய்ப்பொருள் நாயனார் சித்தமாய் இருந் தாரோ அவ்வாறே தன்னுடல் உயிரையும் கூட சிவ னடியார்க்கே உவப்போடு வழங்க அவர் சித்தமாகவே இருந்தார். தம்முயிரை வேண்டி அதனைப் பெறு வதற்காக வேனும் முத்தநாதன் சிவ வேடம் பூண்டானே என்று மகிழ்ச்சியே கொண்டது மெய்ப்பொருள் நாயனா ரின் உள்ளம். ''மந்திரமாவது நீறு'' என்ற ஆன்றோர் களின் வாக்கிற்கிணங்க முத்த நாதன் உயிரைக் காக்கும் மந்திரமாக அவன் பூசிய நீறும், அவன் பூண்ட வேடமும் காவல் ஆக வேண்டும், ஆகவே அவன் பத்திரமாக உயிர்

*''ஓட்டலன்செய் தீமைக் கொறாதுநமர் என்றுரைத்தார்*

*சுட்டியசீர் மெய்ப்பொருளார் சோமேசா - முட்ட*

*ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்*

*பொன்றுந் துணையும் புகழ்''*

- சோமேசர் முதுமொழி வெண்பா

பிழைத்துச் சென்று, தன்னுயிரைக் காப்பாற்றிய சிவ வேடத்தின் பெருமையை எண்ணி எண்ணி உருக வேண்டும், என்றென்றும் முத்த நாதனும் கூட சிவ வேடத்தின் பெருமையை உணர்ந்து அதனைப் பூண்டு இனியேனும் அவன் திருந்தி வாழ வேண்டும் என்பதற் காகவும் அவன் பத்திரமாக உயிர் பிழைத்துச் செல்ல வேண்டும் என்று மெய்ப்பொருள் நாயனார் விழைந் தார். ஒருவர் அல்லது ஓரிருவர் சிவ வேடம் பூண்டு தவறு செய்வார்களேயானால் அதற்காக அவரைப் பழிப்பதும் தண்டிப்பதும் கூட சிவவேடம் பூண்ட சிவநேய செல்வர் கள் எல்லோரையும் பழிப்பதும் தண்டிப்பதும் ஆகி விடலாம். அதனால் சிவ வேடம் தரித்து சிவநேயத்தை வளர்க்கும் சான்றோர்கள் சமுதாயத்தில் அருகி மறைந்து போய்விடலாம் என்றும் அஞ்சியது மெய்ப்பொருள் நாயனாரின் திருவுள்ளம், ஆகவேதான் முத்தநாதன் பூண்ட சிவவேடம் எல்லாக் காலத்திலும் பெருமை யோடு போற்றப்பட வேண்டிய ஒன்று என்பதனையும் ஒரு சிலரின் தவற்றிற்காக மிகப்பெரிய சமுதாயத்தைத் தூய்மைப்படுத்தவல்ல சிவ வேடத்தை - தவ வேடத்தைப் பழிப்பிற்கு உள்ளாக்கி விடக்கூடாது என்ற கருத்தை உலகிற்கு உணர்த்திடும் பொருட்டாகவும்தான் மெய்ப்பொருள் நாயனார் சிவ வேடம் பூண்ட முத்த நாதன் பத்திரமாகச் செல்ல வேண்டும் என்று விரும்பி னார். அவ்வாறே பத்திரமாக சென்றார் சிவனடியார் என்று தத்தன் கூறக்கேட்டதும் பரமானந்தம் அடையும் அவர் தத்தனையும் ''ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்'' என்று கூறிப் போற்றுகிறார்.

''ஐயன் எனக்கருளியவாறு ஆர்செய்வார்
அச்சாவோ''

என்பது திருவாசகத் தொடர். ஐயன் என்று மாணிக்க வாசகர் ஈசனை உவந்துரைப்பதைப் போலவே மெய்ப் பொருளாரும் தத்தனைப் போற்றியிருப்பது காண்க.

தம்மைச் சூழ நின்றிருக்கும் தம் சுற்றத்தார் அரசியல் ஆயத்தார் அனைவருக்கும் ''விதியினாலே பரவிய திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீர்'' என்று மெய்ப் பொருள் நாயனார் அதற்குப் பிறகு அறிவுரை கூறு கிறார். ''முறைப்படி திருநீற்றுச் சிறப்புணர்ந்து அதனைப் பாதுகாத்து உய்யுங்கள்'' என்று மெய்ப் பொருள் நாயனார் கூறியதாகவும் இதற்குப் பொருள் கொள்ளலாம். ''யான் இறைவன் திருவடி இவ்விதம் சேரவேண்டும் என்பது இறைவன் இட்டிருக்கும் விதி. அதன்படியான் சேர்கிறேன். என்னை ஒப்ப நீங்களும் திருநீற்றுத் தவவேடத்தை மதித்து வாழுங்கள்'' என்று நமக்கு அறிவுறுத்துவதாகவும் இத்தொடரின் பொருளை நாம் கொள்ளலாம்.

ஆகவே சேதி நாட்டு மன்னராக வாழ்ந்த மெய்ப் பொருள் நாயனார் உலக மக்களுக்கு வழங்கியுள்ள சேதியாவது ''விதியினாலே பரவிய திருநீற்று அன்பு பாதுகாத்து உய்ப்பீர்'' என்பதாகும். மெய்ப்பொருள் நாயனார் இச்சேதியை உலகிற்கு அருளி சிவ பெருமானின் அருட் காட்சியையும் அப்பொழுதே கண்டுமகிழ்ந்து, அவனருளால் அவன் தாள் நிழலே சேர்ந்துவிடுகிறார். நாமும் மெய்ப்பொருள் நாயனார் காட்டிய வழியில் மெய்ப்பொருளை விழைந்து வாழ்ந்து ஈசனார் பொன்னார் திருவடிப் பேற்றினைப் பெற்று உய்வு அடைவோமாக.

★★★

# முசிறி அருள்மிகு பெரியநாயகி உடனுறை கைலாசநாதர் திருக்கோயில் திருக்குட நீராட்டுவிழா

– **மெ. ரூஸ்வெல்ட்,** தலைவர், திருப்பணிக்குழு

**வை. இராமரத்தினம்,** செயல் அலுவலர்

சோழ வளநாட்டில் காவிரி ஆற்றின் தென் பகுதியில் அமைந்துள்ள புண்ணியத் தலங்களில் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், முசுகுந்த நாட்டின் தலைநகர் முசிறி கிராமத்தில் அருள்மிகு பெரிய நாயகி உடனுறை கைலாசநாதர் திருக்கோயில் சிறப்புடைய சிவத்தலமாக விளங்குகின்றது. இத்தலம் பழம்பெரும் புண்ணியத் தலமாக போற்றப்படுகிறது. இம்மைக்குப் பிணி தீர்க்கும், மறுமைக்கும் வீடுபேறு அளிக்கும் புனிதத் தலமாகும்.

கரூரைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்து வந்த முசுகுந்த சக்கரவர்த்தி தொழுநோயால் பாதிக்கப்பட்டு புனிதத் தலயாத்திரை மேற்கொண்டார். அப்போது, அவர் வளர்த்த நாயும் அந்நோயால் பாதிக்கப் பட்டிருந்தது. சக்கரவர்த்தி பல்வேறு சிகிச்சைகள் பெற்றும் நோயினால் அவதியுற்றார். பல்வேறு தலங்களில் தீர்த்த யாத்திரை மேற்கொண்ட முசுகுந்த சக்ரவர்த்தி பட்டுக்கோட்டைக்கு அருகில் உள்ள முசிறி கிராமத்திற்கு வந்து அங்குள்ள ஸ்ரீபெரிய நாயகி உடனுறை ஸ்ரீகைலாசநாதர் திருக்கோயிலில் தங்கினார். மறுநாள் அதிகாலை சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ் வருடப் பிறப்பன்று அருகிலிருந்த திருக்குளத்தில் தன்னுடன் வந்திருந்த நாய் நீராடி உற்சாகத்துடன் வந்ததைக் கண்ணுற்ற சக்கரவர்த்தி வியந்தார். தானும் அப்புண்ணியத் திருக்குளத்தில் நீராடி தொழு நோய் நீங்க இறைவனைத் தொழுதார். நாளடைவில் முற்றிலும் நோய் நீங்கி ஸ்ரீகைலாச நாதரை வணங்கி கைலாயம் சென்று வரும் பேறு பெற்று தனது புனித யாத்திரையைத் தொடர்ந்தார்.

புனிதத் தல யாத்திரை முடித்து தலைநகர் சென்ற சக்கரவர்த்தி தனக்கிருந்த நோய் குணமடைந்ததை எண்ணிக் கொண்டாடினார். முசிறி கிராமத்திற்கு மீண்டும் வந்து, முசுகுந்த சக்கரவர்த்தி அங்கிருந்த வேளாளர் பெருமக்களைச் சந்தித்து அருள்மிகு கைலாச நாதருக்கு முறைப்படியான கோயில் அமைத்தார். அங்கிருந்த மக்களைத் தம்மக்களாகக் கருதினார். பெருமக்கள் முசுகுந்த சக்கரவர்த்தியின் பெருந்தன்மையைக் கண்ணுற்று அப்பகுதிக்கு முசுகுந்த நாடு எனப் பெயரிட்டு முசிறி கிராமத்தை தலைநகராக ஏற்றனர். இந்நாளும் முசுகுந்த நாட்டு வேளாளர்களுக்கு முசிறி தலைநகராக விளங்குகின்றது.

இத்திருக்கோயில் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் மேலாண்மையின் கீழ் முசிறியைத் தலைநகராகக் கொண்ட வேளாளர்களால் சட்ட முறைப்படி நிருவகிக்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் ஒவ்வொரு தமிழ் வருடப் பிறப்பன்றும் இத்திருக்கோயிலுக்கு சாதி சமய வேறுபாடின்றி பக்தர்கள் பெருந்திரளாகக் கூடி புண்ணியத் தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீபெரியநாயகி உடனுறை கைலாச நாத சுவாமியின் திருவருள் பெற்று செல்கிறார்கள். புண்ணிய திருக்குளத்தில் நீராடி இத்திருக்கோயிலில் வழிபட்டால் நோய்நொடி நீங்கும், நவக்கிரக தோசங்கள் நீங்கும். தனிக்கோயில் கொண்ட சனீஸ்வர பகவான் சகல தோசங்களையும் நீக்குபவர், மற்றும் கயிலாயம் வந்த பலன் அனைத்தும் இத்தலத்தை வழிபட்டுப் பெற இயலும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு செய்யப்பட்ட இத்திருக்கோயில் மிகவும் பழுதடைந்திருந்ததை சீரமைக்க முயற்சித்து முசுகுந்த சக்கரவர்த்தி வழி வந்த முசுகுந்த நாட்டு மக்களால் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஒத்துழைப்பு மற்றும் உதவியுடன் சிறப்புற சில்ப சாத்திர முறைப்படி திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு புதிய கொடிமரம் நிறுவப்பட்டு, திரு வீதிஉலாவிற்கு புதிய உற்சவ விக்கிரகங்கள் செய்து, சனீஸ்வர பகவானுக்கு புதிய சன்னதி அமைத்து எதிர்வரும் சித்ரபானு ஆண்டு ஆனித் திங்கள் 31-ஆம் நாள் (15.7.2002) சுக்லபட்ச சஷ்டி திதி உத்ர நட்சத்திரமும் கூடிய நன்னாளில் காலை மணி 9-க்கு மேல் 10-30 மணிக்குள் சிம்ம லக்னத்தில் ஜீர்ணோத்தாரண மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

★★★

# கீரனூர் அருள்மிகு சிவலோகநாதர் திருக்கோயில்

- திருமதி இராஜேஸ்வரி விஸ்வநாதன்

கீரனார் சாபம் கண்டு தீர்த்த
ஊரனார் உயர்சிவ உலக நாதர்
பேரனார் உயர்மனம் போற்றி போற்றி
கீரனூர் வாழ்சிவம் போற்றி போற்றி!

கிளி பூஜை செய்ததால் இத்திருத்தலத்திற்கு கீரனூர் என்ற பெயர் நிலைத்திருக்கிறது. கீரன் என்றால் இங்கு கிளி என்பது பொருள். திருப்பறியலூர் (திருக்கடவூருக்கு வடமேற்கில் 5 கி.மீட்டர் தொலைவிலுள்ள தலம்) வீரட்டத்தில் தக்கனது வேள்வியின் போது அக்கினி தேவன் சிவனுடைய சாபத்துக்குள்ளாகி கிளி உருவம் அடைந்து விட்டான். அந்த சமயம் சாப விமோசனம் தேடி அக்கினிதேவன் பல இடங்களையும் சுற்றி இறைவனை தரிசித்து வந்தான். மயிலாடுதுறையிலிருந்து 12 கி.மீட்டர் தொலைவில் உள்ள இத்திருத்தலத்தைச் சுற்றியதும் அக்கினி தேவனுக்கு தனது சுய உருவம் கிடைத்திருக்கிறது. இத்தலத்தில் உள்ளிருந்து அருள்பாலிக்கக் கூடிய சிவலோக நாதர் சுவாமியை வழிபட்டு கிளி வடிவம் நீங்கி சுயவடிவம் பெற்றதால் கிளி பூஜித்த தலம் என்னும் பெருமையைப் பெற்றது இவ்வூர்.

இங்கே சிவலோகநாதர் சுவாமி திருக்கோயிலுக்குப் பின்பக்கம் வடக்குத் தெருவில் காசி விசுவநாதருக்கென்று அழகிய சிறிய ஆலயம் ஒன்று உள்ளது. அதே தெருமுனையில் பெருமாள் கோயிலும் தெற்குத் தெருமுனையில் ஸ்ரீகிருஷ்ணா கோயிலும் இடையில் நடுத்தெருமுனையில் ஸ்ரீபால சாஸ்தா திருக்கோயிலும் உள்ளது. இவ்வூரில் உள்ள மாரியம்மன் எல்லையம்மன் தேர்த்திருவிழா மிகவும் பிரசித்தியாக கோலாகலமாக நடக்கிறது.

சிவலோக நாதர் திருக்கோயில் இவ்வூரின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இங்குள்ள அம்மனின் பெயர் க்ஷீராம்பாள். (க்ஷீரம் என்றால் பால் எனப் பொருள்) எனவே தூய தமிழில் பாலாம்பாள் எனக் கூறுகிறோம்.

க்ஷீராம்பிகா சமேத (உடனுறை) ஸ்ரீ சிவலோக நாத சுவாமி ஆலயம் மிகவும் புராதனமானதும் சிறப்பு வாய்ந்ததும் ஆகும். இத்திருக்கோயிலில் குடி கொண்டுள்ள சிவலோகநாத சுவாமிக்கு, அம்பிகை ஸ்ரீ க்ஷீராம்பிகை, பசுவடிவில் வந்து பால் சொரிந்ததாகக் கூறப்படுகிறது. ஒரு சமயம் சோழமன்னன் இராஜசிங்கன் என்பவன் தன் தஞ்சை வளநாட்டின் வளத்தைக் காண தனது குதிரையில் சுற்றி பார்த்து வந்து கொண்டிருந்தான். அவ்வமயம் இவ்விடத்தில் வரும் பொழுது, அம்மன்னனின் குதிரையின் குளம்பில் இரத்தம் கசிவதைக் கண்டான். கீழே இறங்கி பார்க்கையில் தரையில் ஓரிடத்தில் குருதி பெருக்கெடுத்து ஓடுவதைக் கண்டு துணுக்குற்றான். இரத்தம் பெருகுவதைக் கண்டு அவ்விடத்தைத் தோண்டச் செய்தான்; சிவலிங்கம் ஒன்று இருப்பதைக் கண்ணுற்றான். அதே நேரத்தில் ஆச்சரியப்படும் வகையில் பசு ஒன்று வந்து ஈசன் மீது பால் சொரிய பெருகி வந்து கொண்டிருந்த இரத்தம் நின்று போயிற்று. பசுவாக வந்தது பராசக்தி அம்பிகை தான் என்பது பின்னர் தெரியலாயிற்று. குதிரைக் குளம்பினால் கீறல் ஏற்பட்டதாலும் இவ்வூர் கீரனூர் என வழங்கலாயிற்று என்பார்.

இத்திருக்கோயிலில் ஸ்ரீ சிவலோக நாதர் சுவாமி ஸ்ரீ கைலாச நாதர் சுவாமி, ஸ்ரீ காசி விசுவநாதர் சுவாமி மூன்று சன்னிதிகள் தனித்தனியே அமைந்துள்ளதால் மூன்று சிவாலயங்களை முறையாய் தரிசனம் செய்த புண்ணியப் பேறு கிடைக்கபெறுகிறது. இங்கே தாய் க்ஷீராம்பிகை தெற்கு நோக்கி வீற்றிருக்கிறாள். ஸ்ரீ சிவலோகநாதர் சன்னிதி கிழக்கு நோக்கி அமைந்திருக்கிறது.

இத்திருக்கோயிலின் முன் உள்ள திருக்குளத்தில் புனித நீராடி பக்திப் பெருக்குடன் சிவலோக நாதரை தரிசிக்க தீராத வினைகள் தீரும். கிடைக்காத பேறுகளெல்லாம் கிடைக்கப்பெறும் என்று பக்தர்கள் நம்பிக்கையோடு இத்திருக்குளத்தில் நீராடி இறைவனை தரிசிக்கிறார்கள்.

இத்திருக்கோயிலில் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. நுழைவு வாயிலில் கட்டை கோபுரம் உள்ளது. கோபுரத்தை வணங்கி உள்நுழைந்ததும் துவஜஸ்தம்பம் எனப்படும் கொடி மரம் உள்ளது. 16 அடி உயரம் உள்ள இக்கொடிமரம் செப்புத் தகட்டினால் போர்த்தப்பட்டு மிகவும் அழகாக நிற்கின்றது.

கொடிமர விநாயகரை வணங்கிவிட்டு நந்திகேசுவரரை வணங்கி பின் உள்ளே சென்று இறைவன் இறைவியை வணங்கவேண்டும்.

இங்கே மூன்று நிலை கோபுரவாயில்கள் உள்ளன. சிவலோக நாதரை வணங்கி விட்டு பின் வலம் சென்றால் தெற்கு நோக்கிய நர்த்தன விநாயகர்

ஆஞ்சனேயர், நடராசர் மூலவர் உள்ளனர். குரு பகவான் என்று அழைக்கப்படும் ஸ்ரீ தெட்சிணா மூர்த்தி சுவாமி சன்னிதியும் தொடர்ந்து கிழக்கு முகமாக வலம்புரி விநாயகரும், கைலாச நாதர் விசாலாட்சி அம்பாள் சன்னதியும், அதனைத் தொடர்ந்து வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி சன்னிதியும் உள்ளது.

வாயு மூலையில் கிழக்கு முகமாக ஸ்ரீ மகாலட்சுமி சன்னிதியும், வடக்கு முகமாக துர்க்கை அம்மன் சன்னிதியும் அதன் பக்கத்தில் பிரும்மா, அர்த்த நாரீசுவரர் சன்னிதியும் உள்ளது. தொடர்ந்து கீழ்ப்புறத்தில் கிழக்கு முகமாக காசிவிசுவநாதர் சன்னிதி உள்ளது. வடபால் நவக்கிரக சன்னிதியும், நவக்கிரகத்திற்கு கீழ்ப்புறம் தெற்கு நோக்கிய நடராசர் உற்சவர் சன்னிதியும் அமைந்துள்ளது. கீழ்த்திருமாளிகை பத்தியில் மேற்கு நோக்கி சூரியன், பைரவர், சனீஸ்வரர் சன்னிதிகள் தனித்தனியாக உள்ளன. அதனைத் தொடர்ந்து நால்வர் சன்னிதிகள் உள்ளன.

சூரியபகவானுக்கு தனி சன்னிதி மேற்கு நோக்கி இருப்பதால், சூரிய பகவானைக் காலை வேளையில் வணங்கி கிழக்கு நோக்கி பக்தர்கள் சூரிய வணக்கம் செய்ய வாழ்க்கை ஒளி மயமாக ஆவதோடு உடல் நலமுமம் நன்றாக இருக்கும்.

வெளிப்பிரகாரத்தில் ஈசானிய பாகத்தில் யாக சாலையும் வசந்த மண்டபமும் உள்ளது.

இத்திருக்கோயிலுக்கு அக்கினி தீர்த்தம், பால் குளம் என்று சொல்லக்கூடிய திருக்குளம் உள்ளது. (ஆனந்த கங்கை) இது சுகமுக்தி அளிக்கக்கூடிய தீர்த்த மாகும்.

இவ்வாலய மூர்த்தி சுயம்பு மூர்த்தியாகும். தல விருட்சம் வில்வமாகும். இங்கே உயர்ந்து வளர்ந்திருக்கும் வில்வ மரத்தில் உள்ள வில்வ இலைகளை ஸ்ரீ சிவலோகநாதருக்கு அர்ச்சிப்பதோடு மட்டுமல்லாமல் இவ்வில்வ இதழ்களைப் பிரசாதமாகவும் கொடுக்கிறார்கள். பக்தர்கள் அதனைப் பெற்று உண்டு பல நோய்களைப் போக்கிக் கொள்கிறார்கள். வில்வ இலையை வெறும் வயிற்றில் சாப்பிடுவதால் சர்க்கரை நோய் கண்நோய் போன்ற நோய்கள் குணமாகிறது.

இத்திருக்கோயிலுக்கென்று நிலைத்தேர் ஒன்று உள்ளது. இத்திருக்கோயிலில் சித்திரை மாதம் சித்ரா பௌர்ணமியன்று நடைபெறும் திருவிழாவில் இத்திருத்தேர் வீதி உலா வருகிறது. பக்தர்கள் வடம் பிடித்து தங்களுக்கு வேண்டிய வரம் பெற்று மகிழ்கிறார்கள்.

இத்திருக்கோயிலில் உள்ள சுவற்றில் தானாக உருபெற்று வரும் ஆஞ்சனேயர் உருவம் ஒன்று உள்ளது. இது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்பார்களே அதுபோல் ஆண்டுக்கு ஆண்டு உருவ வளர்ச்சி பெற்று வருகிறது. இது மிகவும் சிறப்புடைய ஒன்றாகும். இங்கே பக்தர்கள் வேண்டிக்கொண்டு வெண்ணையைச் சாற்றி மகிழ்கிறார்கள்.

இத்திருத்தலத்தின் முதல் பிரகாரத்தில் அமைந்துள்ள திரு கந்தவேள் சன்னிதியில் கிருத்திகை விழா மாதந்தோறும் சிறப்பாக நடைபெறுகிறது. ஒரு திரு முகமும், இரு கரங்களும் கொண்ட முருகன் வேட மங்கையும், வேழ மங்கையும் உடனிருக்க பக்தர்களுக்கு அருள் புரிகிறார். இத்தலத்து கந்தவேளை அருணகிரி நாதர் வழிபட்டு கீழ்க்கண்டவாறு பாடி இவ்வூருக்கு புகழ் சேர்த்துள்ளார்.

**திருப்புகழ்**

பாரமேருப ருப்பத மத்தென
நேரி தாகஎ டுத்துட னட்டுமை
பாகராரப பப்பணி சுற்றிடு கயிறாகப்
பாதி வாலிபி டித்திட மற்றது
பாதிதேவர் பிடித்திட லட்சுமி
பாரி சாதமு தற்பல சித்திகள் வருமாறு
கீர வாரிதி யைக்கடை வித்ததி
காரி யாயமு தத்தைய ளித்தகிரு
பாளுவாகிய பச்சுரு வச்சுதன் மருகோனே
கேடி லாவளை கைப்பதி யிற்பல
மாடகூடம லர்ப்பொழில் சுற்றிய
கீரனூர்உறை சத்தித ரித்தருள் பெருமாளே

இவ்வூரிலுள்ள பெரும்பாலான பக்தர்கள் தங்கள் வீட்டில் நடக்கவேண்டிய திருமணங்கள், மற்றும் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்புகள் முதலிய நற் காரியங்களுக்கு இம்முருகனிடம் வேண்டிக் கொள் கிறார்கள். காவடி எடுப்பதாக வேண்டிக் கொள்பவர்கள் காரியம் கைகூடியதும் பிரார்த்தனையை நிறைவேற்ற பால்குடம் காவடி எடுக்கிறார்கள். இப்படி முருகனுக்கு காவடி எடுப்பதால் நற்செயல்கள் நடப்பதில் ஏற்படுகின்ற தடங்கல்கள் நீங்கப்பெற்று பரிபூரண முருகன் அருள் கிடைக்கிறது.

இத்திருத்தலத்தில் சிவபிரானுக்கே ஏற்பட்ட இரத்தப் பெருக்கை அம்பிகை போக்கியதால், இரத்த சம்பந்தமான எல்லா நோய்களும் அன்னையைச் சுற்றுவதால் நீங்குகிறது. பக்தர்கள், முழுநம்பிக்கையோடு நோய்கள் நீங்கப்பெறுவார்கள், ஆடி, தை மாதங்க்ளில் வெள்ளிக்கிழமைகளில் மாவிளக்கு ஏற்றி வழிபட்டு அடிப்பிரதட்சணமும் செய்கிறார்கள்.

இத்தகைய பெருமையும் புகழும் வாய்ந்த இத் திருத்தலத்தை வடபுறமும் தென்புறமும் நண்டலாறும் நாட்டாறும் செழிப்படையச் செய்கிறது. இவ்வூர் மக்களை பசிப்பிணியிலிருந்தும் வறுமையிலிருந்தும் போக்கி தஞ்சை வளநாட்டிற்கே உரிய நெல்மணி

களையும் கரும்பு பயிறு வகைகளையும் பயிர் செய்து வளம் கொழிக்கச் செய்கிறது.

இத்திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் ஒவ்வொன்றும், இத்திருக்கோயில் நிர்வாகத்துக்காகவும், பூஜை, அன்னதானம் ஆகியவற்றுக்காகவும் ஒவ்வொரு கொடையாளரும் அளித்த பொன் பொருள் நேரம், காலம் எல்லாவற்றையும் பற்றி விரிவாக விளக்குகின்றன.

இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகத்தின் கீழ் செயல்படும் இத்திருக்கோயிலுக்கு சென்ற ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்து சமய அறநிலையத் துறையினரால் ரூபாய் 7,61,000 மானியமாக வழங்கப்பட்டு, பக்தர்களின் நன்கொடையாக ரூபாய் 2,30,000 வசூலிக்கப்பட்டு கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இத்திருக்கோயிலில் அன்னை க்ஷீராம்பாள் சன்னிதியில் பக்தர்கள் வேண்டிக்கொண்டு வளையல்களும் தொட்டிலும் கட்டி வருகிறார்கள். வளையல்கள் கட்டி வேண்டிக் கொள்பவர்களுக்கு விரைவில் வளையல் காப்பு செய்யும் பாக்கியம் கிட்டுகிறது. குழந்தை பிறந்தவுடனும் வளையல் காப்பின் போது எடுத்து வைத்திருந்த வளையல்களையும் அம்பிகைக்கு செலுத்துகிறார்கள். எத்தனையோ சிந்தித்தும் மருத்துவர்களை சந்தித்தும் நடக்காத காரியம் தீராத மலட்டுத்தன்மை இங்கே இறைவியருளால் நீங்குகிறது. தொட்டிலைக் கட்டிவிடும் பக்தர்களுக்கு தொட்டில் கட்டிச் சீராட்டிப் பாலூட்ட பிள்ளை பிறக்கிறது.

சிவலோகநாதரின் திருவருளைப்பற்றிச் சொல்லவா வேண்டும்? சுவாமி பக்தர்களிடம் பேசியிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். சில தலைமுறைகளுக்கு முன்னால் நடந்த உண்மைச் சம்பவம் இது. இத்திருக்கோயிலில் அர்த்த சாம பூசை நடந்துகொண்டிருந்த சமயம் ஒரு நாள் சிவாச்சாரியாரின் மகன் உள்ளே இருக்க பூசை முடிந்ததும் அறைக்கதவு பூட்டப்பட்டுவிட்டது. சிவாச்சாரியார் வீடு சென்று தன் மகனைக் காணாது இத்திருக்கோயிலுக்குள் வந்து பள்ளியறைக்கதவைத் திறக்கும் தருவாயில் இறைவன் அசரீரியாக ''கதவைத் திறக்காதே உன் மகன் இங்குதான் இருக்கிறான்'' என்று கூறியிருக்கிறார். இப்படிப்பட்ட அற்புதம் நடந்த திருத்தலம் இது.

இங்கு 11 பிரதோஷங்கள் தொடர்ந்து சென்று சிவனை வழிபட நினைத்த காரியம் வெற்றி அடைகிறது. ஆனால் அந்த காரியம் என்ன என்று எவரிடமும் நடக்கும் வரைச் சொல்லாமல் ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டுமாம். பிரதோஷத்தின்போது பெண்கள், பெருமாட்டிகள் கீழ்க்கண்டவாறு பாடி கூடி வழிபாடு செய்கிறார்கள்.

கண்டேன் கீரனூரிலே
க்ஷீராம்பிகா சமேத
சிவலோக நாத சுவாமியைக்
கண்டேன் கீரனூரிலே

மண்டலம் புகழ கிளியம்மன் பூஜைசெய்த
ஈசனைக் கண்டேன் கீரனூரிலே
சந்தியா காலத்தில் சனிப்பிரதோஷத்தில்
சகல தேவரும் வந்துவணங்கிட
சகஸ்ரநாம அர்ச்சனை செய்திட
கண்டேன் கீரனூரிலே.

இங்கே உள்ள கொடி மரத்து விநாயகர் மிகவும் சக்திவாய்ந்தவர். ஒவ்வொரு சங்கடகர சதுர்த்தியன்றும் சிறப்பு வழிபாடு நடைபெறும். பக்தர்கள் காலை முதல் ஒன்றும் சாப்பிடாமல் விரதம் இருந்து மாலை வேளையில் விநாயகருக்கு பூஜை செய்து, கொழுக்கட்டைப் பிடித்து நைவேத்யம் படைத்து பக்தர்களுக்குப் பிரசாதத்தை அளித்து வணங்குகிறார்கள். நினைப்பதெல்லாம் நடக்கிறது.

அன்னை பாலாம்பாளுக்கு அபிஷேகம் செய்த பாலைப் பெற்று அருந்தி பல நோய்களைப் போக்கிக் கொள்கிறார்கள். சர்வரோக நிவாரணியாக இந்த பால் இருக்கிறது.

இத்திருத்தலத்திற்கு செல்லும் சமயம் அதே நாளில் மிக அருகிலுள்ள பிரசித்திப் பெற்ற தலங்களான தென்கிழக்கில் உள்ள சிறுபுலியூர் கிருபாசமுத்திர பெருமாள் (108 திருப்பதிகளுள் ஒன்று), அருகிலுள்ள செகலபதி கூத்தனூர் (சரஸ்வதி அம்மன் தனி ஆலயம்), வடமேற்கில் உள்ள வழுவூர் வீரட்டேஸ்வரர், வடகிழக்கில் உள்ள பெரம்பூர் முருகன் கோயில் இப்படி பல முக்கிய சிறப்பு வாய்ந்த திருத்தலங்களையும் தரிசித்து இறையருள் பெற்று மகிழலாம்.

மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர், திருத்துறைப்பூண்டி செல்லும் மார்க்கத்தில் 12-ஆவது கிலோ மீட்டரில் இத்திருத்தலம் உள்ளது. கீரனூர் என்று கேட்டு இறங்க வேண்டும். இரயிலில் பயணம் செய்ய விரும்புபவர்கள் மயிலாடுதுறை ஜங்ஷனிலிருந்து திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம் செல்லும் இரயிலில் கொல்லுமாங்குடி இரயில் நிலையத்தில் இறங்க வேண்டும். இங்கிருந்து பேரூர் துகளிலும் செல்லலாம். வேண்டுபவர்கள் ஆட்டோவிலும் செல்லலாம்.

இத்திருக்கோயிலுக்கு வெளியூர், வெளிநாடுகளிலிருந்தும் பக்தர்கள் தபால்மூலம் பிரசாதம் பெற்று பயனடைகிறார்கள். திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டம், கீரனூர் 609403 என்ற முகவரியில் உள்ள இச்சிவலோகநாதரின் அருள்பெற்று இவ்வையம் போற்ற வாழ்வோமாக!

★★★

# சேக்கிழாரின் உள்ளீட்டுக் கற்பனை!

- முனைவர் இரா. செல்வக்கணபதி

ஒரு நல்ல கவிதைக்கு, கருத்து, வடிவம், கற்பனை, உணர்ச்சி என்ற நான்கு கூறுகள் சிறந்திருக்க வேண்டும் என்பர் இலக்கியத் திறனாய்வாளர்கள்.

தமிழ்க் கவிஞர்கள், இந்த எல்லைக்குள் நின்று அற்புதமான கவிதைகளைப் படைத்தளித்த பெருமைக் குரியவர்கள்.

கற்பனையைப் பொறுத்தவரை, சமய நூல் களுள், அருளாளர்கள் அதற்கு முதன்மையான இடம் தருவதில்லை. என்றாலும், ஏனைய கவின் இலக்கியங் களில் காணப்படும் கற்பனைக் கூறுகள், ஒரு சில அருளாளர்கள் படைத்த இலக்கியங்களுள்ளும் காணப் படுவதை அறியமுடிகிறது.

சேக்கிழார், ஒரு தெய்வக் கவிஞர், பக்திக் கனிவே அவர் இலக்கியத்தில் பெரிதும் நிறைந் திருக்கும். தேவையற்ற அபூதக்கற்பனைகளுக்கு அவர் இடம் தருவதில்லை. என்றாலும், கலை அழகோடு அவர் பதிந்து வைத்துள்ள சில கற்பனைகள், நம்மைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்துவன.

உதாரணத்திற்கு ஒரு கற்பனையைக் காணலாம். திருவாரூர், திலகவதியாரும், திருநாவுக்கரசரும், அவதாரம் செய்த சிறப்புடையது. இந்நகரத்தின் மருதவளம் கூற வந்த சேக்கிழார், ஓர் அருமையான கற்பனைக் காட்சியை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறார்.

திருவாரூரில் எங்கு பார்த்தாலும், வளவயல்கள், அவற்றுள் ஒரு வயலில், நனகு வளர்ந்து முதிர்ந்த கரும்பு கள், கணுவெடித்துச் சாறுகளைக் கீழே வழியவிடு கின்றன. இது கண்டு, உழவர் தலைவன், கரும்புகளை வெட்டி ஆலைக்கு அனுப்ப உத்தரவிடுகிறான். கரும்பு கள் வெட்டப்பட்டு, அவற்றைப் பிரித்தெடுக்கும்போது, அவற்றுக்கு இடையே கட்டியிருந்த தேன் கூடுகள் கிழிந்து தேன் கீழே வழிகிறது.

கருப்பஞ்சாறும், தேனும் கலந்த தண்ணீர், வளவயலில் நிரம்பி, மடை உடைத்துக் கொண்டு, வாய்க்காலில் பாய்கிறது. இந்த இனிய நீரை, பக்குவ மாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கருதிய உழவர் தலைவன், அத்தண்ணீரை வளவயல் ஒன்றில் பாய்ச்ச மடைமாறுகிறான்.

சில மணிநேரம் கழிந்து, உழவர் தலைவன் வந்து பார்க்கையில், கருப்பஞ்சாறும் தேனும் கலந்த தண்ணீர், மடைமாறிய வளவயலில் பாயாது, மடை யைத் தகர்த்துக்கொண்டு ஓடி ஒரு தரிசு வயலில் பாய்வதைக் கண்டு திடுக்கிடுகிறான்.

உடனடியாக, அதனைத் தடுத்து நிறுத்த விரும்பி, மடை அடைக்க முயன்றால், எங்கும் அதற் குரிய மண் கிடைக்கவில்லை. வரப்பெல்லாம் மஞ்சளும், இஞ்சியும் கொஞ்சி விளையாடுவதால், வரப்பை வெட்ட அவனுக்கு மனம் வரவில்லை. சட்டென்று ஒரு நினைவு வருகிறது. முதல் நாள், கரும்பு பிழிந்து காய்ச்சி, வார்த்த, வெல்லக்கட்டி அருகில், களத்து மேட்டில் குவிந்து கிடப்பதைக் காண்கிறான்.

உடனடியாக ஒரு கூடையும், மண்வெட்டியும் எடுத்துக்கொண்டு, களத்து மேடு சென்று, ஒரு கூடை வெல்லக் கட்டிகளைச் சேகரித்துத் தலையில் தூக்கி வந்து, உடைபட்ட மடையில் கொட்டுகிறான். மடை அடைபடுகிறது. கருப்பஞ்சாறும், தேனும் கலந்த தண் ணீர், அவன் விரும்பியவாறு, பாய வேண்டிய வள வயலில் பாயத்தொடங்கியது. அது கண்டு உழவர் தலைவன் மனம் மகிழ்கிறான்.

இதற்கு காட்சி, இந்த வயலில் மட்டுமல்ல, பல இடங்களிலும், காணப்படுவதாகச் சேக்கிழார் கவிதை புனைந்து அழகூட்டுகிறார்.

ஒரு கோணத்தில் பார்த்தால், இக்கற்பனை, கருத்துக்கு ஒவ்வாது அதிகமாகத் தோன்றும். சேக்கிழாரைப் போன்ற தெய்வக் கவிஞர்கள், நடைமுறைக்கு ஒத்த வராத இத்தகு கற்பனைகளை, ஏன் பதிவு செய்ய வேண்டும்? கவிஞர், கற்பனைக்கு இடையே, மறை பொருளாக, ஏதேனும் கருத்துச் சொல்ல வருகிறாரா என்று தேடத் தொடங்குகிறோம். ஓர் அற்புதமான செய்தி பளிச்சென்று நம் கருத்தில் மின்னல் கீற்றாய்ப் பாய்கிறது.

திருவாமூர், திலகவதியாரும், திருநாவுக்கரசரும் அவதரிக்கப்போகும் சிற்றூர் என்பதை எண்ணிமகிழும்



சேக்கிழார் திருவுள்ளம், கற்பனையோடு இணைத்துப் பின்னே நிகழப்போகும் வரலாற்றுச் செய்தி ஒன்றையும் பதிவு செய்ய விரும்புகிறது.

இந்த நகரில் திருவவதாரம் செய்யபோகும் கருப்பஞ்சாறு அனைய திருநாவுக்கரசர், மயக்கத்தைத் தருகின்ற சமண சமயம் என்னும் தேனோடு கலந்து, மயங்கித் தன்னிலை மறந்து, பணி செய்ய வேண்டிய, தாம் பிறந்த சைவ சமயத்திற்குத் தொண்டாற்றிடாது, திசை மாறிபோய், சமணசமயம் என்னும் தரிசு வயலில் தங்குகிறார். ஆனால், இக்கருப்பஞ்சாற்றோடு முன்னரே பிறந்து, சோதனைகளாலும், வைராக்கியத்தாலும் சுடப்பட்டு, முன்னரே மன உறுதியால் திரண்டு நிற்கும் வெல்லக்கட்டி அனைய திலகவதியார் துணையோடு, சமண சமய மடை அடைக்கப்பட்டு, திருநாவுக்கரசர் சைவம் திரும்புவார் என்ற பின் நிகழ்வை, இணையான கற்பனைக் கூறுகளால் சேக்கிழார் பதிவு செய்திருக்கும் அழகு நம் நெஞ்சத்தை நிறைவிக்கிறது.

இத்தகு கற்பனைகளைக் கவிஞர் திட்டமிட்டுச் செய்தார் என்று கூற இயலாவிடினும், இவ்வாறு ஓர் உள்ளீட்டைத்தேடி, பொருத்தி மகிழ்வது ஒரு இனிமையான அனுபவம் தான். இத்தகு, இணைக்கற்பனை கொண்ட பல கவிதைகள், சேக்கிழாரின் பெரிய புராணத்தில் நிறைவாக அமைந்துள்ளன. நம் சிந்தனையைக் கிளறிய சேக்கிழாரின் அற்புதக்கற்பனையைப் பொதிந்து நிற்கும் பாடல் இது தான்.

'கடைஞர்மிடை வயல்குறைத்த
கரும்புகுறை பொழிகொழுஞ்சாறு
இடைதொடுத்த தேன்கிழிய
இழிந்தொழுகு நீத்தமுடன்
புடைபரந்து நிமிறுஒலிப்பப்
புதுப்புனல்போல் மடைஉடைப்ப
உடை மடை அக் கரும்படுகட்
டியின் அடைப்ப ஊர்கள் தொறும்!

– திருநாவுக்கரசு நாயனார் புராணம்

★★★

# உயிரும் அதனைப் பேணுதலும்

– ''சிவஞானச்சித்தர்'' டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி

இன்றைய தமிழ் உலகில் ஞானப்பிழம்பாக வலம் வந்து, மற்றும் சைவர்களின் நெஞ்சத்திருக்கையாகத் திகழ்கிற ''ஸ்ரீலஸ்ரீ தருமைபுரம் குருமணி அவர்களது ''திருவருட் செய்தி'' என்ற நூலில் ''மக்கள் சேவை மஹேசன் சேவை'' என்பதற்கு வேறு பொருள் கொள்கிறார்கள். அதாவது மக்கள் சேவை மஹேசனுக்கே என்று கொள்ளல் வேண்டும் என்று.

எனது நேர்மை, சத்தியம், பரோபகாரம் போன்று நான் கடைபிடிக்கும் பண்பிற்கு மூலகாரணம் ''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்'' என்ற குறட்பாதான் என்பது உண்மை.

சற்றே சிந்தித்தால் உலகிலேயே சிறந்த பொருள் பணம் என்று ஐயமின்றி துலங்கும். இதனைத்தழுவி வள்ளுவரும் ''பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருள் அல்லது இல்லை பொருள்'' என்று உறுதிப்படுத்துகிறார்.

மற்றும் பொருளைக் கணிசமாக சேகரித்து வைத்து செயல்படுகிறவனை வேறு ஒரு குறளில் உவமை காட்டுகிறார். ''குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்து ஒன்று உண்டாகச் செய்வான் வினை'' என்று. ''ஈட்டி எட்டிய மட்டும் பாயும், பணம் பாதாளம் மட்டும்பாயும்'' என்ற முதுமொழி மக்கள் மத்தியில் நிலவி வருவதைக் காணலாம்.

கருவாடு விற்கிற பெண்ணையும், காய்கறி விற்கிற ஆணையும் தரக் குறைவாக அழைத்து பேசி அனுப்புவதை நாட்டு நடப்பில் காணப்பார்க்கிறோம். அதே நேரத்தில், எதிர்பாராத விதமாக ஐம்பது லட்சங்களுக்கோ அல்லது ஒரு கோடிக்கோ அந்நபர் ஒருவருக்கு லாட்டரி விழுந்தவுடன் சுற்றுப் புறத்தில் உள்ள மேலாளர்கள் அனைவரும் ஒன்றுகூடி முறையே சீமாட்டி என்றோ அல்லது சீமான் என்றோ நேரில் சென்று அழைப்பதையும் உலக நடப்பில் காணகிறோம்.


அதுபோன்று அதிமுக்கியமாக நாம் கருதும் பொருளை ஒரு கத்தி முனைக்கு முன்போ அல்லது துப்பாக்கி முனைக்கு முன்போ சலனமின்றி இழக்கத் துணிகிறோம் என்பதை நாம் உணர்வது அவசியமாகிறது. இக்கட்டான நேரம், நெருக்கடியான சமயம் தான் பணத்தைக் காட்டிலும் உடலே முக்கியம் என்று உணரும் கட்டமாக அமைகிறது எனலாம்.

ஆனால் உயர்ந்ததாக எண்ணிய இவ்வுடலையும் ஒரு காலகட்டத்தில் நான்கு பேர்கள் சேர்ந்து இடுகாட்டிற்கோ அல்லது சுடுகாட்டிற்கோ எடுத்துச் செல்வதைப் பார்க்கிறோம். இதனைத் தழுவியே மஹா பாரதத்தில் நச்சப் பொய்கையில் யட்சன் தர்மரிடம் உலகத்தில் பெரிய ஆச்சர்யம் யாது? என்று கேட்டதற்கு தர்மர் ''அன்றாடம் இறக்கின்ற மனிதர்களை இடுகாட்டிற்கும் சுடுகாட்டிற்கும் எடுத்துச் செல்கின்றதைப் பார்த்து கொண்டிருக்கும் எஞ்சிய மனிதர்கள், நாம் சாசுவதமாக வாழப்போகின்றோம் என்று எண்ணுவது ஆச்சர்யம்'' என்று விளக்கம் அளித்தார்.

உடலுள் உயிர் இருக்கிறது. அது நம் கண்ணிற்கு புலப்படாது. அதனால் நாம் நமக்கு உயிர் இல்லை என்று கூறமுடியுமா? மின்சாரம் கண்ணிற்குத் துலங்குவதில்லை, அதனால் அச்சக்தி இல்லை என்று கூற முடியுமா? உயிரை நேரில் பார்த்தால் தான் நான் நம்புவேன் என்று ஒருவன் கூறுவானாகில் அவன் உயிரில்லா பிணமன்றோ? இதனாலேயே வள்ளுவர் ''உலகத்தார் உண்டென்பது இல்என்பான்வையத்துள் அலகையா வைக்கப்படும்'' என்று குறிப்பிடுகிறார்.

கண்ணிற்கு புலப்படும் பொருளையும், உடலையும் பேணுவதற்கு ஓரளவு வகை தெரியலாம், ஆனால் கண்ணிற்கு தெரியாத உயிரை எப்படி பேணுவது? துடப்பம் வைத்து துடைக்க முடியுமா? இதனாலேயே வள்ளுவர் ''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்கிறார். காரணம் ஒழுக்கத்தில்தான் உயிர் ஓம்பப்படுகிறது.

மற்றும் ''சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு ஆக்கம் எவனோ உயிருக்கு'' என்றும் ''அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்கில்லை கேடு'' என்றும் அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில் சிறப்பாகக் கூறியிருக்கிறார்.



உயிருக்கு உறுதுணையாக இருந்து நம்மை உய்விக்கும் வகையைக் கீழே உள்ள பதிகங்கள் உணர்த்துவதை ஆய்ந்து அதன்படி ஒழுகினால் நமக்கு அது நிச்சயம் வீடு பேற்றை அளிக்கும். ஐயம் இல்லை.

1. ''எந்நிலையில் நின்றாலும் எக்கோலம்
கொண்டாலும்
மன்னிய சீர் சங்கரன்தாள் மறவாமை
பொருள்என்றே
துன்னிய வேடந்தன்னை துறவாதே தூயசிவந்
தன்னை மிகும் அன்பினால் மறவாமை
தலைநிற்பார்''

2. ''நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும்,
நடந்தாலும்
மென்றாலும், துயின்றாலும், விழித்தாலும்,
இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருக்காலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம்
குணமிக்கார்''

- சேக்கிழார் சுவாமிகள்

3. ''இருக்கினும் நிற்கும்போதும்
இரவுகண் துயிலும்போதும்
பொறுக்கென நடக்கும்போதும்
பொருந்தி ஊண்துய்க்கும்போதும்
முருக்கிதழ் கனிவாயாரை முயங்கி
நெஞ்சழியும் போதும்
திருக்களா உடையநம்ப சிந்தை
உன் பாலதாமே''

- அதிவீரராம பாண்டியர்

4. ''துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சம் நைத்து நினைமின் நாடொறும்
வஞ்சகம் அற்று அடிவாழ்த்த,
வந்த கூற்று அஞ்ச
உதைத்தன ஐந்தெழுத்துமே''

- திருஞான சம்பந்தர்

பின் குறிப்பு :-

நான் பிறவிச் சூழலிலிருந்து விடுபட்டு உய்வு பெறுகிறேன். நிச்சயம்! ஆகவே ''தாம் இன்புறுவது உலகம் இன்புறுக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்'' என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க இக்கட்டுரை எழுதியுள்ளேன்.

★★★

# சிவலிங்கம் - யாவும் கடந்த கடவுள் வடிவம்

- டாக்டர் சிவப்பிரியா, தில்லிப் பல்கலைக் கழகம்

உடல் இயங்குவதற்கு உயிர் தேவை - இவ்வாறே உலகங்களும், உயிரினங்களின் இச்சை, கிரியை, ஞானசக்திகளும் செயல்படுவதற்கு இறைவன் தேவை.

உலகுக்கு உயிரானவன் எம்பெருமான்; உயிர்க்கு உயிராய் அங்கங்கே நின்றான் என உலகங்களையும் உயிர்களின் சக்திகளையும் இயக்கி மூலகாரணமாய் இருப்பதால் திருமூலநாதர் என்னும் திருப்பெயருடன் மூலகாரணனாக மூலவராக விளங்கும் பரமசிவன் லிங்கமாக, ஆண்என்றோ பெண்என்றோ சுட்டியறிய முடியாத தூண் வடிவமாக, எல்லாவுயிர்க்கும் பொதுவாகவுள்ள பொதுவடிவாக வழிபடப்படுகின்றான். லிங்கம் மூலவராக இருப்பதற்குப் பலப்பல சிறப்புக் காரணங்கள் உள்ளன.

1. பிரம்ம விஷ்ணு பராசக்தி ருத்திரர்கள் முதலாக எல்லோரையும் எல்லா உலகங்களையும் தோற்றுவித்து முடிக்கின்ற பரமசிவன் தோற்றமும் முடிவும் இல்லாமல் என்றும் இலங்குகின்றவன். இலங்குகின்ற ஈறில்லாதவன் ஈசன் ஒருவனே என என்றும் திகழும் ஈசனைத் திருவாசகமும் தேவாரமும் போற்றுகின்றன. அடியும் முடியும் இல்லாத லிங்கம் தோற்றமும் முடியும் இல்லாத பரம்பொருளை, மெய்க்கடவுளைக் குறிக்கும் வடிவமாகும். தோற்றம் உள்ளவர்கள் ஆணாகவோ பெண்ணாகவோ அவரவர்கள் தோன்றிய வடிவத்துடன் தொழப்படுகின்றனர். பரமசிவனோ தோற்றம் இல்லாமல், ஆண் பெண் வேறுபாடுகளையெல்லாம் கடந்து உள்ள உண்மைக் கடவுள். **''பெண்ணல்லை ஆணல்லை பேரும் அல்லை''** எனப் பாலினங்களுக்கு அப்பாற்பட்ட பரம்பொருளாக, செம்மையான சிவமாக, பரப்பிரும்மமாகத் திகழும் இயற்கையான கடவுள். இதனால் ஆண் என்றோ பெண் என்றோ சுட்டியறிய முடியாத, திருமுடியும் திருவடியும் இல்லாத லிங்கமாகத் தொழப்படுகின்றான்.

2. இறைவனே படைத்து வைத்த இயற்கையான வடிவம் சிவலிங்கம். தலை, காலுள்ள வடிவங்களையெல்லாம் மனிதர்கள் செதுக்க வேண்டும். இயற்கையில் எந்தக் கல்லையும் கைகாலுள்ள ஆண் வடிவிலோ பெண் வடிவிலோ காணமுடியாது. ஆனால் லிங்கங்கள் இயற்கையில் தாமே கிடைக்கின்றன. ஆற்றங்கரைகளில் குறிப்பாக ஓங்காரேசுவரம் என்ற ஜோதிலிங்கத் தலத்தை ஒட்டிப் பாயும் நர்மதையாற்றங்கரையில் ஏராளமான சிறுசிறு லிங்கங்கள் கிடைக்கின்றன. பரமேசுவரன் யாராலும் உண்டாக்கப் படாதவன். தானே வெளிப்பட்டுக் காட்சி தருபவன். இத்தகைய தான்தோன்றி ஈசனை, சுயம்புவைக் குறிப்பதற்கு அவனே தோற்றுவித்த, தானே கிடைக்கின்ற லிங்க உருவமே வழிபாட்டிற்குச் சிறந்ததாக, மூலவராக விளங்குகின்றது. இமயமலையில் உள்ளதும் கண்ணன் மற்றும் பாண்டவர்களால் வழிபடப்பெற்றதுமான கேதாரம் என்னும் ஜோதிலிங்கத் தலத்தில் தானே தோன்றிய லிங்கம் உள்ளது. இயற்கையாக அமைந்த சிறு பாறையே இங்கு மூலவராக கேதாரேசுவரராகத் திகழ்கின்றது.


அமர்நாதம் என்னும் தலத்தில் தானே தோன்றும் பனிலிங்கம் உள்ளது. இங்கு கோடைநாட்களில் பனிலிங்கம் வளர்ந்து பெரிதாவதும் குளிர்நாட்களில் குறைந்து போவதும் விஞ்ஞானிகளின் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்ட வியக்கத்தக்க நிகழ்ச்சி. அண்ணாமலையில் அனல் லிங்கமாகக் காட்சி தந்த பரமன் அமரநாதத்தில் பனிலிங்கமாகப் பொலிவுறுகிறான். மஞ்சள், சந்தனம், பொன், வெள்ளி, முத்து, பவளம், சாதம், வெண்ணெய் ஆகியவற்றால் லிங்கம் உருவாக்கப்பட்டு வழிபடப்படுகின்றது. சென்னையை அடுத்த திருமுல்லைவாயில் என்ற திருத்தலத்தில் பாதரச லிங்கம் உள்ளது.

3. தெய்வீகத்திற்கெல்லாம், ஆன்மீகத்திற்கு எல்லாம் அடிப்படை பரமனது உடுக்கையிலிருந்து பிறக்கும் ஓங்கார ஒலியே. இந்த ஓங்கார ஒலியைக் குறிக்கும் வடிவம், அதாவது எழுத்து லிங்கமாகும். பதஞ்சலி முனிவரின் நண்பரான திருமூல முனிவர்

''இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம்''

என்று போற்றுகிறார். அ.உ.ம என்ற மூன்று ஒலிகள் இணைந்து ஓங்கார ஒலி உண்டாகின்றது. சிவலிங்கத்தின் தூண் பகுதி அகரத்தையும், வட்டமான ஆவுடையார் பகுதி உகரத்தையும், கீழ்ப்பகுதி மகரத்தையும் குறிக்கின்றன என்று ஆகமம் கூறுகிறது. ஓங்காரேசுவரன், ஓங்காரநாதன், ஓமன் என்பவை ஓங்கார ஒலியை உண்டாக்கிய பரமேசுவரனின் திருப்பெயர்கள்.

***



மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஓங்காரேசுவரம் பன்னிரு ஜோதிலிங்கத் தலங்களுள் ஒன்றாகும். இத்தலத்தில் நர்மதையாற்றின் இருகரைகளிலும் அமலேசுவரன், ஓங்காரேசுவரன் என்ற திருப்பெயர்களுடன் பரமன் எழுந்தருளி அருள்புரிகின்றான். ஓமன் அயல்நாட்டில் உள்ள தலம்.

4. சிவலிங்கம் எங்கும் நிறைந்த ஒளிமயமான இறைவடிவம். பிரம்மனும் விஷ்ணுவும் பக்தியுடன் வழிபட்டுப் பரமனது திருக்காட்சி கண்ட வடிவம். பரமசிவன் அதள பாதாளங்களையும் வானகத்து அனைத்துக் கோளங்களையும் கடந்து சென்று எல்லா உலகங்களுக்கும் ஒளிபரப்பி அடியும் முடியும் இல்லாத நெருப்புத் தூணாக நின்றான். அந்த நெருப்புக் கம்பமே ஜோதி லிங்கம். எங்கும் பரந்து விளங்கிய தழல் தூணின் அடிமுடி காண்பதில் பிரம்மனும் விஷ்ணுவும் தோல்வி கண்டனர். இருவரும் பக்தியோடு உள்ளன்போடு ஜோதிலிங்கத்தைத் தொழுது துதிசெய்தபோது ஈசுவரன் வெளிப்பட்டுக் காட்சி தந்தருளினான். ஜோதிலிங்கத்திலிருந்து, வெளிப்பட்ட வடிவமே லிங்கோற்பவ மூர்த்தி. லிங்கோற்பவ மூர்த்தியை

விளம்பட்டவர் மலர்மேலவன் மாலும்
ஒருவகையால்
அளம்பட்டு அறிவொண்ணாவகை ஆரழல்
ஆகிய் அண்ணல்
உளம்பட்டு எழு தழல்தூண் அதன் நடுவே ஒரு
உருவம்
விளம்பட்டு அருள்செய்தான்

என்று தமிழாகரர் திருஞானசம்பந்தர் துதிக்கிறார்.

செங்கணானும் பிரம்மனும் தம்முளே
எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற்றேன் என்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே

என்று திருநாவுக்கரசர் லிங்கோற்பவ மூர்த்தியைத் தொழுகிறார். பரமேசுவரன் அடிமுடியற்ற தழல்தூணாக நின்று எங்கும் ஒளிபரப்பிய நாளே கார்த்திகைத் தீபத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. ஓராண்டினைக் குறிக்கும் முந்நூற்று அறுபத்தாறு திரிகளைச் சேர்த்துக் கட்டி ஏற்றி நெருப்புத் தூணை, ஜோதிலிங்கத்தை உண்டாக்கித் தொழுத பின் மாலையில் ஊரெங்கும் வீடெங்கும் விளக்கேற்றி வைத்துக் கொண்டாடி எங்கும் ஒளிவெள்ளமாக்குகின்றனர்.

தொல் கார்த்திகை நாள் .... தையலார்
கொண்டாடும் விளக்கீடு

என்று சம்பந்தர் தேவாரம் இத்தொன்மையான திருவிழாவைச் சிறப்பிக்கின்றது. அடிமுடியற்ற ஜோதிலிங்கத்தைப் பக்தியுடன் வழிபட்ட பிரம்ம விஷ்ணுக்களுக்குப் பரமன் காட்சி கொடுத்த நாளே சிவராத்திரி.

பக்தியுடன் வழிபட்டபோது லிங்கத்திலிருந்து பரம சிவன் வெளிப்பட்டுக் காட்சி தந்ததால் பிரம்ம விஷ்ணுக் களைப் பின்பற்றி எல்லோராலும் லிங்க வடிவத்தி லேயே இறைவன் பூசிக்கப்படுகின்றான்.

யாவரும் பெறவுறும் ஈசன் காண்க

என்று மாணிக்கவாசகர் வாழ்த்துகிறார். உயர்திணை அஃறிணை மற்றும் பால்வேறுபாடு இல்லாமல் அனைத்து உயிரினங்களுக்கும் சிவலிங்கம் பொதுவாக இருப்பதை

எவ்வுயிர்க்கும் இயல்பானான் காண்

என்று திருவாசகம் போற்றுகின்றது. நெருப்புத் தூணாக நின்ற இறைவன், மலையாக அமைந்ததால் மலைகள் யாவும் சிவலிங்க வடிவில் உள்ளன.

''கல்லுயிராய் நின்ற கனலே போற்றி''
''மால் அறியா நான்முகனும் காணா மலை''

என்று தேவாரமும் திருவாசகமும் அண்ணா மலையைப் போற்றுகின்றன. இறைவன் மலையாக விளங்கியதாலேயே மலைவலம் வருவதும் மலை வணக்கமும் சிறப்பிடம் பெறுகின்றன. பரமன் கிரீசன் என்று தொழப்படுகின்றான்.

கோயிலில் மூலவரான சிவலிங்கத்திற்குப் பின்புறச் சுவற்றில் இருப்பவர் லிங்கோற்பவ மூர்த்தி. உள்ளத்தில் பக்தி இல்லாமல் நான் என்ற ஆணவம் இருக்கும்போது உலகமெங்கும் அலைந்து திரிந்தாலும் இறைவனைக் காண முடியாது; நான் என்ற ஆணவத்தை நீக்கிவிட்டு உள்ளத்தில் பக்தியோடு தொழுதால் இருந்த இடத்திலேயே கடவுளைக் காணலாம் என்ற சித்தாந்த உண்மையை எடுத்துச் சொல்கின்றது லிங்கோற்பவ மூர்த்தி வடிவம். லிங்கத்திற்குப் பக்கச் சுவரிலே உள்ளவர் அஞ்ஞானத்தை நீக்கி ஞானம் வழங்கும் தட்சிணாமூர்த்தி. தென்திசையில் ஆலமரத்தடியில் நான்கு முனிவர்களுக்கு வேதங்களை அருளிச் செய்த தால் ஆலமர் அடிகள், தட்சிணாமூர்த்தி, தென்னன் என்றெல்லாம் திருப்பெயர்கள் அமைந்தன. அமைதிக் கும் நிலையான தன்மைக்கும் இந்த வடிவமே ஆதாரம். ஞானகுரு வடிவமான தட்சிணாமூர்த்தியை, மௌன வடிவை

''தென்னவன் எனையாளும் சிவன் அவன்''
''ஞானத்தாய் உனை நானும் தொழுவேனே''
''மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே''
''குருபரனாகி அருளிய பெருமை''

என்று திருமுறைகள் போற்றுகின்றன. லிங்கத்திற்கு மற்றொரு புறம் இருப்பது அசைவுக்கும் இயக்கத் திற்கும் ஓசையொலிக்கும் ஆதாரமான நடராச வடிவம். சிவனது ஆடல் இல்லா விட்டால் உலகிலுள்ள அனைத் தும் அசைவில்லாமல் சவமாகி விடும். யமன்திசை எனப்படும் தென்திசைக்கு உரிய அமங்கலப் பெயர் நீங்கவேண்டும் என்பதற்காக இறைவன் தென்திசை யில் நின்று நடம்புரிந்து உலகங்களையெல்லாம் இயக்குகின்றான் என்பதை

''தென்பால் உகந்து ஆடும் தில்லைச் சிற்றம்பலவன்''
''தென் மாத்திசை வசைதீர்தர தில்லைச்
சிற்றம்பலத்துள்
என் மாத்தலைக் கழல் வைத்து எரியாடும் இறை''

என்று மாணிக்கவாசகர் ஆடலழகனைப் போற்றுகிறார். நம்பினால் சிவம், இல்லையேல் சவம் என்பதையே நம்பினால் நடராஜன் இல்லையென்றால் எமராஜன் என்ற பழமொழி எடுத்துக்காட்டுகிறது. இருக்க வேண்டியவற்றை நிலைக்கச் செய்து அசைந்து இயங்க வேண்டியவற்றை இயங்கச் செய்து, எங்கும் ஒளி பெருக்கி யாவருக்கும் ஞானம் வழங்கி எல்லா வுயிர்க்கும் நன்னெறிகாட்டிப் படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல், முக்தி அருளல் என்னும் ஐந்தொழில் புரியும் கடவுளை

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நா நவின்று ஏத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே

என்று தேவாரம் போற்றுகிறது. நல்ல பண்பிற்கு அடையாளமே ஈசனை நினைந்து சிவசிவ என்று சொல்வதுதான். இதனாலேயே நல்லவர் ஒருவரைப் பற்றிக் கூறும்போது சிவனே என்று இருப்பான் என்று சொல்கின்றனர். ''சிவனே எம்பெருமான் என்று இருப் பார்க்கு என்றும் நன்றாகும் நம்பியை நள்ளாற்றானை'' என்பது அப்பர் தேவாரம்.

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதிதானே

என்று ஆகமங்கள் கூறுகின்றன.

★★★

# பக்திவழி தந்தருளே!

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

இல்லாமல் இருப்பதாகி,
இருக்குமிடம் அறியாதாகி,
அல்லும்பகல் அயராமல்,
ஆட்டுவிக்கும் அங்கமாகித்
தொல்லுலகில் தொன்றுதொட்டுத்
தொடர்ந்துவரும் மானுடரின்,
அல்லல்தரும் ஆசைகளை
அடுக்கடுக்காய் அடுக்கிவைத்துப்
பல்உறுப்பும் பலவிதமாய்ப்
பதைபதைக்கப் படுத்திவைத்துச்
சொல்லுக்குள் அடங்காமல்,
தோன்றிவரும் கோடிகோடி,
பல்வேறு எண்ணங்களைப்,
படைத்துவைக்கும் ஒன்றாகி,
இல்லாமல் இருக்குமிடம்
எவர்அறிவார் என் மனமே! 1

உன்னையேநான் தேடித்தேடி,
ஓயாமல் அலைந்தாலும்,
'என்னைஅறிய என்னைமுதலில்,
இனம்கண்டால் இயலுமென்று',
என்னுள்ளே இருந்துகொண்டே,
'என்னைநீயோ அறியவேண்டின்,
உன்னைநீயே அறிந்துகொண்ட
உணர்வால்நீ அறிந்திடுவாய்';
சொன்னதுநீ என்றாலும்,
சொல்லியதைக் கேட்பதும்நீ,
என்கண்கள் காண்பதையும்,
என்மூக்கு நுகர்வதையும்,
என்உடம்பு உணர்வதையும்,
எங்கிருந்தோ மறைந்திருந்தே,
என்கடமை இவைகளென்று
இயங்கவைப்பாய் என்மனமே! 2

எங்கெங்கும் நிறைந்திருந்தும்,
எவ்வுயிரில் இணைந்திருந்தும்,
தங்குமிடம் கண்டுகொள்ளத்
தவித்துவரும் மானுடர்தம்,
அங்கமெலாம் நீயிருந்தும்,
அறிவதையும் மனம்தடுக்க,
சங்கமத்தில் மனமும்நீயும்,
சார்வதையும் தடுத்துவிட்டுப்
பொங்கிவரும் எண்ணங்களின்,
பொம்மையாகிப் பொறிபிழந்து,
சங்கடங்கள் தந்துதந்து,
தவிக்கவைக்கும் என் மனத்தை
இங்கிதமாய் நிலைப்படுத்தி
என்றென்றும் உனைத்துதிக்கப்
பங்கமிலாப் பரமசிவா
பக்திவழி தந்தருளே. 3

★★★

# திருப்புகழ் யோகி வள்ளிமலை சுவாமிகள்

**- திருப்புகழ்த் தேனீ**

இன்றைக்கு 600 ஆண்டுகட்கு முன்னர் திருவண்ணாமலையில் வாழ்ந்த அருணகிரியார் திருப்புகழ் முதலான நூல்களை இயற்றியருளினார். அவருக்குப் பின்னர் தோன்றிய பலதிருப்புகழ்ப் பற்றாளர்கள் அவற்றைப் போற்றிப் பாதுகாத்து வந்தனர். தற்காலத்திலும் பல திருப்புகழ்ப் பற்றாளர்கள் நம்மிடையே உலவிவருகின்றனர். திருப்புகழாதிய நூல்கள் இன்றும் நம்மிடையே வழக்கத்தில் உள்ளமைக்கு இவர்களே காரணமாகின்றனர்.

1916ஆம் ஆண்டு முதல் 1950 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டிலும் (கர்னாடகா) பெங்களூரிலும் திருப்புகழ்ப் பாடிப்பரப்பியவர் வள்ளிமலைத் திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள் ஆவார். இவரது வாழ்க்கையோடு தொடர்புடைய வியத்தகு நிகழ்ச்சிகள் சில வற்றை விசு-மாசி இதழில் (மார்ச் 2002) கண்டோம். இக்கட்டுரையில் இவர்தம் வாழ்க்கை வரலாற்றை முழுதும் காண்போம்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பூனாச்சி புதூர் என்ற ஊரில் ப்ரமோதூத (1870) ஆண்டு கார்த்திகைத் திங்கள் மூலநாளில் பிறந்தார். இவரது தந்தை சிதம்பர ஜோசியர், தாயார் லட்சுமியம்மாள். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் அர்த்தநாரி என்பதாகும். திருச்செங்கோட்டு ஈசனைப் பல காலும் வேண்டிப் பெற்ற பிள்ளையாதலால் அத்தலத்து ஈசனின் பெயரையே இவருக்குச் சூட்டினர். உற்ற வயதில் பள்ளியில் சேர்த்தனர். ஏட்டுக் கல்வியில் நாட்டமின்றி இருந்த இவரை மைசூர் சமஸ்தானத்தில் மடைத்தொழில் (சமையல்) புரிந்து வந்த தாய்மாமனிடம் அனுப்பி மடைத்தொழில் கற்க ஏற்பாடு செய்தனர்.


மடைத்தொழில் செய்து சிறப்போடு வாழ்ந்து வரும் நாளில் இவருக்குக் குன்மநோய் கண்டது. மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் பழனி சென்று பழனியாண்டவருக்கு அபிஷேகம் செய்யும் பாலையுண்டு நோயைப் போக்கிக் கொள்ளத் தீர்மானித்து மனைவியுடன் பழனி சென்று அங்கேயே பல நாட்கள் தங்கி நோய் நீங்கப் பெற்றார். மேலும் பல நாட்கள் அக்கம்பக்கத்து மலை வீழ்ச்சிகளிலிருந்து அபிஷேக தீர்த்தம் கொண்டு வருதல் போன்ற தொண்டுகளில் ஈடுபட்டார். இவரது மனைவியும் கோயிலைச் சுத்தம் செய்தல், கோலமிடுதல் போன்ற திருப்பணிகளில் நாட்டம் செலுத்தி வந்தார்.

ஒரு சமயம் உற்சவத்தின்போது தேவதாசி ஒருத்தி சிந்து பைரவி ராகத்தில் 'வங்காரமார்பிலணி' என்ற திருப்புகழ்ப் பாடலைப் பாடிஅபிநயம் புரிந்ததை இவர் காணும் வாய்ப்பு ஏற்பட்டது. அம்மாது ''சிங்கார ரூபமயில்'' என்ற அப்பாடலின் பின்பகுதியை நிரவல் செய்து பாடியது இவரை வெகுவாகக் கவர்ந்தது. அன்று முதல் அந்தத் திருப்புகழை மனப்பாடம் செய்யத் துவங்கியதோடல்லாமல் அவற்றைச் செந்தமிழ் நாடெல்லாம் பரப்புவதைத் தம் பணியாக மேற்கொண்டார். இப்பணியில் ஆர்வம் மிகுதியாகி குடும்ப விவகாரங்களில் நாட்டம் குறைந்தது. தல யாத்திரை செய்து இறைவனை வழிபடத்துவங்கினார். பல வட நாட்டுத் தலங்களைத் தரிசித்துப் பின்பு தென்னாட்டுத் தலங்களை தரிசித்துப் பிறகு கதிர் காமம் சென்று தரிசித்து விட்டு இந்தியா திரும்புகையில் கோவில்பட்டி வந்து சேர்ந்தார்.

அங்கு வேங்கடராயர் (ஹெட்சர்வேயர்) என்பவரின் தொடர்பு கிடைத்தது. இவர் சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த ஆசார சீலர். இல்லற ஞானி. இவரிடம் சுவாமிகள் 45 நாட்கள் உபநிடதங்கள், பகவத்கீதை, ஞானவாஸிஸ்டம் ஆகிய பலப்பல அரிய நீதிகள் விளக்கும் பேருண்மைகளைக் கற்றறிந்தார். சுவாமிகள் அவரிடமிருந்து விடை பெற்றபோது திருவண்ணாமலை சென்று சேஷாத்ரி சுவாமிகள், ரமண மகரிஷிகள், ஈஸ்வர சுவாமிகள் ஆகியோரைத் தரிசித்து ஆசி பெறுமாறு வழி காட்டினார்.

எனவே திருவண்ணாமலை சென்று ரமணரைத் தரிசித்தார். கோவணாண்டியாக தடியுடன் நின்ற ரமணரின் கோலம் தம்மை ஆட்கொண்ட பழனியாண்டவராகவே காட்சியளித்தது. அது கண்டு மெய் சிலிர்த்துப் போனார். மேலும் அன்றைய ரமணாஸ்ரம இயற்கையெழில் அவரை அங்கேயே சில நாட்கள் தங்கவைத்து விட்டது. பிறகு ஈஸ்வர சுவாமிகளையும் தரிசித்து ஆசிபெற்றார்.

ஒரு நாள் சுவாமிகள் மலையிலிருந்து அடிவாரம் இறங்கி வந்தபோது சுவாமிகளை வழிமறித்து சேஷாத்ரி



சுவாமிகள் ''திருப்புகழ் உன் மந்திரம் அல்லவா அர்த்தநாரி'' எனக் கேட்டார். இது சுவாமிகளை பெரு வியப்பில் ஆழ்த்தியது. ''ஆத்மாத்வம் கிரிஜாமதி'' என்ற சங்கரரின் சிவமானஸபூஜா நான்காவது ஸ்லோகத் தைப் பொருளோடு எடுத்துக்கூறி அதே பொருள் தரும் பாடல் திருப்புகழில் உள்ளதா என சுவாமிகளைக் கேட்க அவரும் ''எனதியானும் வேறாகி எவரும் யாதும் யானாகும் இதயபாவனாதீதம் அருள்வாயே'' (அமல வாயு) என்ற திருப்புகழ் வரிகளைக் கூறி விளக்கத் துடன் பதில் அளித்தார். அதைக் கேட்ட சேஷாத்ரி சுவாமிகள் உனது தவத்திற்குத் திருப்புகழே போது மானது. அதுவே மகா மந்திரம். வள்ளிமலையே உனது தவத்திற்கு உகந்த இடம் என உபதேசித்தார்.

1916ஆம் ஆண்டு வள்ளிமலைக் கோயில் கும்பாபிஷேகத்திற்கு வந்த சுவாமிகள் மலையின் அமைதியான சூழ்நிலையால் ஈர்க்கப்பட்டார். வெகு நாட்களுக்கு முன்பு திருவண்ணாமலையில் சேஷாத்ரி சுவாமிகள் வள்ளிமலைக்குச் செல்ல உபதேசித்தது நினைவுக்குவந்தது.

மலை மீது கன்னி குன்றுக்கும், பர்வத ராஜன் குன்றுக்கும் இடையே சப்பாத்திக் கள்ளி புதர் மண்டிக் கிடந்த இடத்தை சீர் செய்து ஆசிரமம் அமைத்துக் கொண்டார். ஊர் மக்கள் கொண்டுவந்து கொடுத்த பழங் கூழையும் ஆறிய கஞ்சியையும் அமுதமாகப்பருகினார். வருவோர்க்கும் வழங்கினார்.

கெத்துவாதியத்தை (தம்புரா போன்று சிறிதாக உருவம் கொண்டது. வலக்கையில் தென்னங் குச்சியும், இடக்கையில் சோளத்தட்டையும் கொண்டு தட்டி தாளத் திற்கு ஏற்ப ஜதிகள் உண்டாக்குவது) வாசித்துக் கொண்டு பாடும் நாதத்தால் சுற்றியுள்ள ஊர் மக்கள் பெரிதும் கவரப்பட்டனர். பகலில் வயற்காட்டில் வேலை செய்து விட்டு இரவில் சுவாமிகளை நாடி பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தனர். சுவாமிகளைத் தேடி வரும் அன்பர் கூட்டம் நாளுக்கு நாள் பெருகியது. தம்மை நாடியவர் களையெல்லாம் திருப்புகழ் பாடச் செய்தார். குறக் குலப் பெண்முதல் மறைக்குலப் பெண் வரை அவரிடம் பாடம் கேட்டனர். அந்நாளில் சுற்றியுள்ள ஊர் மக்கள் திருப்புகழ் பாடிக் கொண்டே நிலத்தை உழுத காட்சி மிகவும் வியப்புக்குரியது.

அன்பர்கள் கொடுத்த பசுமாடுகள் ஆச்ரமத்தை அலங்கரித்தன. ஆவினங்கள் சுவாமிகளிடம் குழந்தை கள் போல் விளையாடின. ஆவினங்களுக்குத் தீவனம் சில சமயங்களில் அடிவாரத்திலிருந்து வர நேரமாகி விட்டால் சுவாமிகள் உண்ணாவிரதமிருந்து பசுக்கள் வயிறார உண்ட பின்னரே புசிப்பார்.

முதன் முதலில் ஆச்ரமத்தை அலங்கரிக்க வந்த பசுவிற்கு 'சிங்காரி' எனப் பெயரிட்டார். தம் இஷ்ட தெய்வமாம் வள்ளியம்மையை மறவாதிருக்கப் பசுக் களுக்கு 'சுந்தரவல்லி' 'வேதவல்லி' என்றெல்லாம் பெயர் சூட்டினார். தினம் மாலை 6.30 மணியளவில்

கோபூஜை நடத்திய பின்னரே திருப்புகழ் பாராயணம் தொடரும். சுவாமிகளின் பன்னிரண்டாண்டு ஆச்ரம வாழ்க்கையில் இவை நேரம் தவறாமல் கடைப்பிடிக்கப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆச்ரமம் துவக்கிய புதிதில் வந்த பெருமக்கள் அங்கு சகஜமாக உலாவிய அரவங்களைக் கண்டு அஞ்சியதால் அவை தமை ஒரு சட்டியில் இட்டுச் சற்றுத் தொலைவில் (ஆச்ரமத்திலிருந்து வள்ளிமலை ஊருக்கு இறங்கும் பாதையில்) சறுக்குப் பாறைக்கு அருகில் புற்று இருந்த இடத்தில் கொண்டுபோய் விட்டார். திருப்புகழ் நாதத்தில் திளைத்துக் களித்து உலாவிய நாகங்கள் புற்றிலும் அந்நாதத்தைக் கேட்டு மகிழ ஏதுவாக வெள்ளிக்கிழமை தோறும் புற்றுக்குச் சென்று திருப் புகழ்ப் பாடி பால்வார்க்கும் வழக்கத்தைக் கடைப் பிடித்து வந்தார்!

சுவாமிகளின் கம்பீரமன சாரீரம், சுத்தமான உச்சரிப்பு, பிடிப்பான சந்தமிடுக்கு, பிசகாத சுருதி லயம் எல்லாம் தனிச் சிறப்பு வாய்ந்தவை. ஒரு பாட்டின் அடியோடு வேறு பாடல்களின் அடிகளைச் சேர்த்து பொருள் பொருந்த விளங்கும்படி விமர்சித்தல் இவரிடம் காணப்பட்ட ஒரு சிறந்த கலையாகும். ஒரு பாட்டைப் பாடி பாட்டின் முடிவில் வரும் தம்பிரானே! 'பெருமாளே' என்ற விளியுடன் பிரார்த்தனைப் பகுதியை சேர்த்துப்பாடி முடிப்பது இவர் ஏற்படுத்திய அரிய முறையாகும். இதைத் தற்போது திருப்புகழ் பாடுவோர் பலரும் பின்பற்றுவதைக் காண்கிறோம்.

ஆங்கில ஆட்சிக்காலத்தில் ஜனவரி முதல் தேதி யன்று சர்க்கார் உத்யோகஸ்தர்கள் உயர் பதவிகளில் இருந்த ஆங்கிலேயர்களைப் பூமாலை, பழம் முதலிய வற்றுடன் சென்று பார்த்து மரியாதை செலுத்தி வந்ததை விரும்பாத திருப்புகழ் பதிப்பாசிரியர் வ.த. சுப்ரமண்யப் பிள்ளை அப்புத்தாண்டில் தணிகையாண்டவனைத் தரிசிக்கும் வழக்கத்தை மேற்கொண்டார். அவருக்குப் பின் அவர் தம் உறவினர்களும் இப்பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தனர். இதனையறிந்த சுவாமிகள் திருப்புகழ் அடியார்களுடன் சென்று தணிகையாண்ட வனைத் தரிசிக்கும் வழக்கத்தை ''திருப்புகழ் திருவிழா'' என்ற பெயரில் 1918 ஆண்டு ஜனவரி முதல் தேதி துவக்கினார். இன்று இவ்விழா படிவிழா என்ற பெயரில் பெருவிழாவாக மாறியுள்ள தற்கும் ஏனைய திருத்தலங் களில் ஜனவரி முதல் தேதி யன்று படிவிழாக்கள் நடை பெறுவதற்கும் முன்னோடி நம் சுவாமிகளே என்பதில் மிகையொன்றுமில்லை.

ஒரு சமயம் சுவாமிகள் தணிகையாண்டவன் சன்னதியில் நின்று திருத்தணித் திருப்புகழ்ப் பாக் களை இசைத்துக் கொண்டிருந்தார். தணிகை மணி வ.சு. செங்கல்வராயர் அவர்களும் தரிசனத்திற்கு வந்தார். சுவாமிகள் பாடிக் கொண்டிருந்ததைப் பொறுமையோடு நின்று கேட்டுக்கொண்டிருந்தார்.

''கதவைப் போடவேண்டும். நேரம் கடந்து விட்டது'' என்ற அர்ச்சகரின் எச்சரிக்கையைக் கேட்டுப் பாடுவதை நிறுத்திய சுவாமிகளைப் பார்த்து 'இப் பாடல்களை எங்கிருந்து மனப் பாடம் செய்தீர்' எனச் செங்கல்வராயர் வினவ சுவாமிகள் ''வ.த. சுப்ரமண்யப் பிள்ளை பதிப்பிலிருந்து'' என விடை பகர்ந்தார். தாம் அப்பதிப்பாசிரியரின் மகன் என்பதை சுவாமிகளுக்கு கூற, சுவாமிகளும் தாம் யார் என்பதைக் கூற இருவரும் கட்டித் தழுவிக்கொண்டனர் இந்நிகழ்ச்சிக்குப் பிறகு சுவாமிகள் சென்னை வரும்போதெல்லாம் செங்கல்வ ராயர் வீட்டில் தங்குவது வழக்கம். இவ்வீட்டை சுவாமிகள் ''திருப்புகழ்த் தாய்வீடு'' எனக் கூறுவார்கள். அவ்வில்லத்தில் இரவில் வெகுநேரம் நடைபெறும் சுவாமிகளின் திருப்புகழ்ப் பாராயணத்தைக் கேட்க சென்னையில் பல பாகங்களிலிருந்தும் அன்பர்கள் கூடுவார்கள். அவர்களுக்காக நம் சுவாமிகள் வள்ளி மலையிலிருந்து வரும்போதெல்லாம் வெளியூர் சென்று திரும்பும் ஒரு தாய்தன் குழந்தைகளுக்குத் தின்பண்டம் வாங்கி வருவது போல் அடியார்களுக்குத் திரட்டிய பால், நெய், சுவைமிகு ஊறுகாய்கள் செய்து கொண்டு வருவார்.

அடியார்களும் வள்ளிமலைத் திருப்புகழ் ஆச்ரமத்தைத் தங்கள் தாயகமாக பாவித்துச் சென்று தங்கி மன நிம்மதியோடு வீடு திரும்புவதை வழக்க மாகக் கொண்டிருந்தனர். இதிலிருந்து சுவாமிகள் அடி யார் பால் காட்டிய பரிவும், அடியார்கள் சுவாமிகள் பால் கொண்டிருந்த பாசமும் நன்கு புலப்படுகிறது.

ஒரு சமயம் சென்னை சென்றபோது தம்புச் செட்டித் தெருவில் சிறுமியொருத்தி அவரை அணுகி ''நான் ஒரு பாட்டு பாடுகிறேன், கேட்கிறாயா'' என்றாள். சுவாமிகள் 'சரி' என்ற சொல்ல ''விரகற நோக்கியும்'' என்ற திருப்புகழ்ப் பாடலை மோகனராகத்தில் இசைத்து சுவாமிகளைக் கவர்ந்ததோடு அவரது வெற்றிலைப் பெட்டியை அச்சிறுமி வெகுமதியாகக் கேட்டாள். சுவாமிகளும் மறுக்காமல் கொடுத்துவிட்டார். சிறுமி சென்றதும் அவளைப் பற்றித் தகவல் கேட்க மறந்ததை எண்ணி வருந்தினார்.

சில நாட்களுக்குப் பின்னர் மலைக்குத் திரும்பிய போது தாம் சிறுமியிடம் கொடுத்த வெற்றிலைப் பெட்டி ஒரு பாறையின் மீது இருக்கக் கண்டு பெருவியப்புற்று அதனைத் திறந்துபார்த்தார். அதில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் யாவும் அப்படியே இருந்தன. யார் இப்

# வணங்கு வடிவேலை

- திருமதி உமா சுப்பிரமணியன், மடிப்பாக்கம்

பாதயாத்திரையில் பழனிக்குப் போனால்
புலனிருக்கு தம்பி
பாதை முழுதும் துணை வருவான்
நம் ஆனை முகன் தம்பி (பாத)

ஆண்டு தோறும் அடியவர் கூட்டம்
ஆண்டியைதேடி அன்பரின் ஓட்டம்
நம்பியவர்க்கு நலமே கூடும்
நம்மைப்பற்றிய தீமைகள் ஓடும் (பாத)

தமிழுக்கு கடவுள் அவன்தானே
தந்தைக்குப் பொருள் சொன்னவனே
உலகாளும் உமையாள் மகன்தானே
நம்மை ஆளும் குகன்தானே (பாத)

பாடிடு வண்ணத்தமிழ் மாலை
சூடிடு வாசப்பூ மாலை
கூடிவருமே நல் வேளை
நாடிடுவோமே அவன் தாளை (பாத)

அழகானவன் அருளானவன்
அனைத்துக்கும் பொருளானவன்
ஒளியானவன் வழியானவன்
ஒப்பற்ற தமிழ் மொழியானவன் (பாத)

பன்னிரு கண்ணால் பார்ப்பான்
பாவங்கள் பலவும் தீர்ப்பான்
என்னிரு கண்ணால் கண்டேன்
எழில் பொங்கும் ராஜா அலங்காரம் (பாத)

பெட்டியை இங்கு கொண்டுவந்து வைத்திருக்கக் கூடும் என எண்ணுகையில், ''நான்தான் பொங்கி'' என்று ஒரு குரல் கேட்டது. அது முதல் பொங்கியம்மனை அப்பாறையில் ஆவாஹனம் செய்து பூஜித்து வந்தார். இன்றும் தம்மை வணங்கும் அன்பர்கள் வாழ்வில் எல்லா நலன்களும் பொங்கி வரச் செய்யும் தாயாக பொங்கியம்மன் விளங்குகிறாள்.

கார்த்திகை மாதந்தோறும் மூல நட்சத்திர நாள் ''அருணகிரியார் ஜயந்தி நாள்'' என 1923ஆம் ஆண்டு முதல் தம் அடியார் குழாத்துடன் கொண்டாடி வந்தது குறிப்பிடத்தக்கதாகும். இன்றும் சுவாமிகளின் அடியார்கள் மாதந்தோறும் மூலநட்சத்திர தினத்தன்று அவரது சமாதிக்கு பூஜை செய்து கொண்டாடுகின்றனர் சுவாமிகள்துவக்கிய தெங்கால் திருப்புகழ் சங்கத்தினர் இன்றும் விடாது அருணகிரியார் ஜயந்தியைக் கொண்டாடுகின்றனர்.

அடியார்கள் தினம் நியமத்துடன் ஓதி உய்ய அருணகிரிநாதரின் திருப்புகழாதிய பாடல்களைக் கொண்டு **திருப்புகழ்ப் பாராயணத் தவநெறித் திருமுறை,** பசுக்களை பூஜை செய்ய **திருப்புகழ் கோபூஜை,** குறிப்பிட்ட நேரத்தில் பாராயணம் செய்ய இயலாதவர்களுக்கு அவர்கள் செய்யும் செயல்களினூடே பாராயணம் செய்ய வசதியாக **தின அநுட்டானத் திருப்புகழ்,** மூப்பு, பிணி, வறுமை இவற்றால் உண்டாகும் துன்பத்தையும், பகை, ஏவல், பூதம் ஆகியவற்றால் ஏற்படும் இன்னல்களையும் மனக் கவலை, தீவினை அகலவும், எமபயம் நீங்கவும் மெய்க்காவல், வேல் மாறல், மார்கழி மாத பாராயணத்திற்கென மார்கழி திருப்புகழ்ப்பாராயணத் திருமுறை, இரண்டாம் உலகப் போரின் போது மக்கள் பீதியைப் போக்க பாராயணக் குண்டு ஆகிய நூல்களைத் தொகுத்தருளியுள்ளார். இவை தவிர வள்ளி கல்யாணம், மனதுக்கும் அறிவுக்கும் தர்க்கம் என்ற நூல்களையும் தொகுத்துள்ளார்.


இவ்வாறு திருப்புகழ்த் தொண்டாற்றிய திருப்புகழ் சுவாமிகள் விக்ருதி ஆண்டு (1950) கார்த்திகைத் திங்கள் அஸ்வினி நாளன்று மறைந்தார். தாம் வாழ்ந்த காலத்தில் எண்ணிய படியே திருப்புகழ் ஆச்ரமக் குகையில் சமாதி வாய்க்கப்பெற்றார். இதை அறிந்த திருவண்ணாமலை ஈஸ்வர சுவாமிகள் பூவுலக மக்கள் கேட்டுச் சுவை திருப்புகழ் இசையை இனி வானுலக மக்களும் கேட்டுச் சுவைப்பர் என கீழ்க்கண்ட செய்யுளில் நம் சுவாமிகளின் சிறப்பை இனிது இயம்பியுள்ளார்.

''ஞானத்தருணகிரி நாதர் கவிமழையின்
தான முகிலாந் தனிசச்சி தாநந்தா!
தேனூறுந் தெய்வத் திருப்புகழின் கீதமினி
வானோருங் கேட்பர் மகிழ்ந்து''

★★★

# கருணைக் கடவுளாம் கந்தன்

- கவிஞர் ச.க. ஏகாம்பரம், எம்.ஏ., பி.எட்.



சித்தம் தெளிவித்த சிங்கார வேலவனே
நித்தம் துதிப்பேன் நினைந்து.

கருணைக் கடவுளாம் கந்தனைக் கண்டால்
அருளைப் பெறலாம் அகத்துள் - ஒருபொழுதும்
உன்னை மறவாது உள்ளத்தில் வைத்துநான்
மண்ணில் இருப்பேன் மகிழ்ந்து

குன்றுதோறும் நின்ற குணக்குன்றே நீயின்றி
நன்றெதுவும் வாய்க்காது, நாநிலத்தில் -
வென்றிடும்
ஆற்றலைப் பெற்றிருந்தும் ஆண்டிபோல
நின்றதனால்
போற்றிடப் பெற்றாய் புகழ்

சரவணப் பொய்கையில் சண்முகனாய் தோன்றி
அருள்மழை பெய்வித்தாய் அன்றே - ஒருமுறை
உன்னை நினைத்தாலே உள்ளம் உருகிநான்
என்றும் அடைவேன் எழில்

அசுரரை வெல்ல அனலாகத் தோன்றி
திசையெட்டும் வென்ற திருவே - அசைந்தாடும்
தென்றலென வாழும் திருவருளே உன்னைநான்
கண்குளிர காண்பேன் களித்து.

செந்தில் முருகனே செல்வக் குமரனே
சிந்தை மகிழ்ந்திட சீக்கிரம்வா - கந்தனை
எந்தநாளும் எண்ணின் எழிலெல்லாம் முகர்வதனால்
சொந்தமாகும் நல்ல சுகம்

பழமொன்று வேண்டி பழநிக்குச் சென்று
அழகெல்லாம் செய்தாய் அகத்தில் - பழுத்த
பழமான நீதான் பரமனுக்கே பாடம்
அழகாக சொன்னாய் அறிந்து.

வள்ளிக்கு வாழ்வளித்த வள்ளலே உன்னைநான்
உள்ளத்தில் வைத்தேன் உவப்புடனே -வெள்ளிப்
பனிமலை வாழும் பரமனின் மைந்தா
கனிதமிழ் செய்தாய் கனிந்து

முத்தமிழ் தந்து முருகனென்று பேரெடுத்த
உத்தமன் உன்னால் உயர்வடைந்தேன் -
சித்தருக்கும்

★ ★ ★

# மூன்றெழுத்து மருந்து

– இந்திரா ஆரா அமுதன், திருவரங்கம்

பகவானுடைய ஆயிரம் நாமங்களில் ''கோவிந்தா'' என்கிற நாமம் மிகுந்த சிறப்பு வாய்ந்தது.

''விந்த'' என்றால் தேடி அடைவது என்று பொருள். ''கோக்கள் ஆன பசுக்கள் கிருஷ்ணனிடம் உயிராக இருந்து அவரைத் தேடி அடைந்து மோக்ஷம் அடைகின்றன. கோவிந்தா என்னும் நாமத்தில் ''ந்'' என்னும் மெய்யெழுத்துக்கு மதிப்பு கிடையாது, அதனால் இந்த நாமத்தை மூன்றெழுத்துடைய மருந்து என்கிறோம்.

இந்த மூன்றெழுத்தை உச்சரித்துதானே, எத்தனையோ பாபங்களைச் செய்த ''கத்திரபந்து'' மோக்ஷம் பெற்றான் என்று திருமாலையில் பாடுகிறார் தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

ஆடிப் பூரத்தில் அவதரித்த ஆண்டாள் அருளிய திருப்பாவை பிரபந்தத்தில் மூன்று முறை கோவிந்த நாமத்தை மூன்று பாசுரங்களில் பாடியிருக்கிறார். அதாவது 27-வது பாட்டான ''கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா'' என்பதிலும் 28-ஆவது பாட்டான ''சிற்றஞ் சிறு காலை'' என்ற பாசுரத்தில் ''குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா'' என்றும், 29வது பாட்டான ''வங்கக் கடல் கடைந்த'' பாசுரத்தில் ''இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா'' என்றும் பகவானை விளித்துப் பாடியிருக்கிறாள், விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்பது பெரியோர் வாக்கு. அதுபோல மருந்தான மூன்றெழுத்து நாமத்தை சுலபமாக உச்சரித்து உய்வு கொள்ளுமாறு ஆண்டாள் அறிவுறுத்துகிறாள்.

பாண்டவர் மகிஷியான திரௌபதி தன் மானத்தை காத்துக் கொள்ள தன் 'மெய்'யையும், 'கை'யையும் தான் முதலில் நம்பிக்கொண்டு புலம்பியபடி இருந்தாள். பின்னரே, தன்மேல் உள்ள நம்பிக்கையை கைவிட்டுவிட்டு, இரண்டு கைகளையும் தலைக்குமேல் தூக்கியபடியே மூன்றெழுத்து மந்திரமான ''கோவிந்த'' நாமத்தை மெய் சோர, கை சோர கதறிய பின்தான் புடவை சுரந்தது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

ஈஸ்வர நாமாக்களுக்குள் ''ஹர'' என்னும் நாமமும், விஷ்ணு நாமாக்களுக்குள் ''கோவிந்தா'' என்னும் நாமமும் விசேஷமானவைகள்.

ஒரு உபன்யாச கூட்டம் நடப்பதாக வைத்துக் கொள்வோம். அதில் உபன்யாசம் நிகழ்த்துபவர் சற்று சுவராஸ்ய குறைவாக சொல்கிறார் என்றும் வைத்துக் கொள்வோம்! அப்போது என்ன நடக்கும்? மனித சுபாவப்படி, பொது ஜனங்கள் கதையில் ஈடுபாடு கொள்ளாமல், தங்களுக்குள்ளேயே கதை அளக்க ஆரம்பித்து விடுவார்கள். அவர்கள் கவனத்தை திருப்ப உபன்யாசகர் என்ன செய்வார்? உடனே ''நம பார்வதி பதயே'' என்பார். கூட்டமும் உடனேயே ''ஹர ஹர மகாதேவா'' என்று பதிலளிப்பார்கள். பின் அமைதியுடன் கதையைக் கேட்பார்கள். இது எல்லா இடத்திலும் நடக்கும் காட்சிதான்.

ஹர நாமாவைவிட கோவிந்த நாமாவுக்கு சற்று மகிமை அதிகம். எவ்வாறென்றால், ''நம பார்வதி பதயே'' என்று முதலில் சொன்ன பிறகுதானே பதிலுக்கு 'ஹர ஹர மகாதேவா'' என்று கூறுவார்கள்.

கோவிந்த நாமமோ, என்றால், ''சர்வத்ர கோவிந்த நாம சங்கீர்த்தனம்'' என்றவுடன் ''கோவிந்தா, கோவிந்தா'' என்றுதான் பின்கோஷம் இடுவது வழக்கம். ஆரம்பிப்பதும், முடிப்பதும் ஒரே நாமாவைத்தான்.

சில தீவிர வைஷ்ணவர்கள் 'ஹர' நாமாவைச் சொல்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆனால் எல்லா இடத்திலும், எல்லா காலத்திலும் ''ஸர்வத்ர கோவிந்த நாம சங்கீர்த்தனம்'' என்று உச்சரிக்கப்பட்டவுடன், ''கோவிந்தா, கோவிந்தா'' என்ற கோஷம் வானைப்பிளக்கும்.

தேரைவடம் பிடிக்கும் போதும், புரட்டாசி மாசத்தில் வேண்டிக்கொண்டு மலை ஏறும் அன்பர்களுக்கும் உத்ஸாகம் தருவது இந்த நாமா ஒன்றுதான். அதனால்தானே என்னமோ, ''ஸர்வத்ர'' என்னும் அடைமொழியை வைத்தார்கள் என்று எண்ணத்தோன்றுகிறது.

ஜகத்குருவான ஆதிசங்கராச்சாரியார் தனது ''விவேக சூடாமணி''யின் ஆரம்ப ஸ்லோகத்தில் ''கோவிந்தம் பரமானந்தம் ஸத்குரும் ப்ரணதோஸ்மி அஹம்'' என்று சொல்லி ஆனந்தப்படுகிறார்.

அவருடைய குருவின் பெயர் ''கோவிந்த பகவத் பாதர்'' ஆகும். குரு, தெய்வம் இருவரின் பெயராக உள்ள கோவிந்த நாமத்தை சொல்லிச் சொல்லி புளகாங்கிதம் அடைகிறார்.


சத்யப்ரமாணம் செய்ய மூன்று தரம் சொல்வது போல, பஜகோவிந்தம், பஜகோவிந்தம், பஜகோவிந்தம் என்று ஆரம்பிக்கும் ஸ்லோகத்தை இயற்றி ஆனந்தப் படுகிறார் ஆதிசங்கரர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நாமாவான மூன்றெழுத்து மருந்தை தினமும் நாம் உச்சரித்து சம்சாரம் என்னும் பெருங்கடலைத் தாண்டிச் செல்ல முயற்சி செய்வோமாக!

ஆநிரைகளே உய்வு பெறும்போது, ஆறறிவு படைத்த நாமும் கோவிந்த நாமத்தை சதா சர்வகாலமும் உச்சரித்தபடியே பரமாத்மாவை அடைக்கலம் அடைய ஏன் வழிதேடக்கூடாது? ★

# வில்லி நகராளும் செல்வியே கோதா!

- **ரங்கமணி பாட்டி**, திருவரங்க



1. சரணம் சரணம் தாயே உன் சரணம்
சகல உலகிற்கும் ஜனனி சரணம்
சிரந்தாழ்த்தி கரம் கூப்பி சிந்தனை செய்பவர்க்கு
செல்வமளிக்கும் பரம கருணா வாரிதியே
அரவணைத் துயில்பவன் மாலுறும் மாதேவீ
அரங்கருக்கே மலர் சூடிக் கொடுத்த பூங்கோதே
வருவாய் தயை புரிவாய் கோதா தேவியே
வில்லி நகராளும் செல்வியே கோதா!

2. துளப வனத்தில் தோன்றிய உயர் மாணிக்கமே
தவமுடை விட்டுச் சித்தர் கண்டெடுத்த ஆணிமுத்தே
வளமுடை புதுவை நகர் செய்ததொரு பாக்கியமே
வந்ததொரு பெண்ணரசாம் அருங்கலமே
உளமகிழ்ந்து அரங்கர்க்கே உகந்தளித்த பாமாலை
உன்னத கவி பாடும் கோகிலமே
வருவாய் தயை புரிவாய் கோதா தேவியே
வில்லி நகராளும் செல்வியே கோதா!

3. நந்தகுமாரனை சொந்தமுடன் குலவ
நல்லதோர் மார்கழியில் நோன்பிருந்த மரகதமே
இந்த உலகெங்கும் இயங்கும் உன் அருளாலே
வந்த வினை தீர்க்கும் நீலக கருவிழியாளே
சுந்தரச் செந்தமிழ்ல் நீ தந்த பாடல் சுவை
சிந்தைக்கு இனித்திடும், செப்பும் வாய் மணக்கும்
வருவாய் தயை புரிவாய் கோதா தேவியே
வில்லி நகராளும் செல்வியே கோதா!

4. அற்புதத் திருமேனி வடிவினை உடையாய்
அடியார் பால் இரங்கும் அன்னை கோதா
கற்பகத் தருவே கருணையின் உருவே
கமல மலர் அபயகரமுடைய திருவே
மல்லி நாடாண்ட மடமயிலே - ரங்க
மன்னன் பிரிய கோதா நாயகியே
வருவாய் தயை புரிவாய் கோதா தேவியே
வில்லி நகராளும் செல்வியே கோதா!

5. மாசிலா மதிவதன ஒளி உடையவளே
மங்கல சிந்தூரமணி திருநுதலாளே
தேசுடை வைடூர்ய தோடுடையாளே
திருப்பவள செவ்வாய் குறுநகையாளே
வாசமிகு மலரணி கேச முடையாளே
வண்ண நவமணி முடியுடையாளே
வருவாய் தயை புரிவாய் கோதா தேவியே
வில்லி நகராளும் செல்வியே கோதா!

6. சொல்லினால் உந்தன் சோதி வடிவழகு
சொல்லும் திறமை எனக்கில்லையே
அல்லும் பகலும் உன் திருநாமம்
சொல்ல எனக்கருள்வாய் அகில ஜகன்மாதா
புல்லறிவுடையேன் உன் பொற்பதம் அன்றி
புகலிடம் அறியேன் அம்மா சுடர்க் கொடியே
வருவாய் தயை புரிவாய் கோதா தேவியே
வில்லி நகராளும் செல்வியே கோதா!

★★★

# மாண்புடைய மங்கை

## (குமுதவல்லியார்)

– புலவர் பரந்தாமன், எம்.ஏ., பி.எட்.

உயர்வற உயர்நலமுடைய ஸ்ரீமந் நாராயணன் இவ்வுலகில் அறியாமையாகிய இருளை நீக்கி, இவ்வுலக மக்களுக்கு மெய்யறிவைப் புகட்ட விரும்பினான். இதற்காக வேத, புராண, இதிகாச, சாஸ்திர, மந்திரங்களை உறுதுணையாக்கியும் பலன் கிடைக்காமையால், தானே அவதாரங்களை எடுத்து தர்மங்களை எடுத்தியம்பினான். அப்போதும் பலன் குறைவாகவே இருந்தது. திருப்பாற்கடலிலே எழுந்தருளியுள்ள திருமாலிடம், பூமிதேவி ஒருநாள் உரையாடினாள். நீங்கள் ஒன்பது அவதாரங்களையெடுத்தும், மக்களுக்கு மெய்யறிவைப் புகட்ட இயலவில்லை என வருந்துகின்றீர். எனவே யான் பூமியில் அவதாரம் செய்து முயலுகின்றேன். எனக்கு ஒரு வாய்ப்பு அளியுங்கள் என வேண்டினாள். அவருடைய அனுமதியுடன் அவருக்கு விருப்பமான அடியாராகப் பிறக்க நினைத்து, ஸ்ரீவில்லிபுத்தூரிலே, பெரியாழ்வார் திருத்துழாய் தோட்டத்தில் திருத்துழாயின் அடியிலே ஒரு பெண் பிள்ளையாக அவதரித்தாள்.

தந்தையான பெரியாழ்வாரின் மூலம் திருமாலின் சிறப்புக்களை அறிந்து, அவரை அடைய பாவை நோன்பு இயற்றத் தொடங்கினாள். கருவிலே திருவுடைய மக்களைத் தோற்றுவிப்பது சிறந்த எளிய முறையென்பதையும், அதைப் பெண்கள் மூலமே உருவாக்க முடியும் என்பதையும் உணர்ந்து, பாவையர் நோன்பினை நோற்றாள். இதனை பிரகலாதனின் வரலாற்றாலும் உணரலாம். வேதம் அனைத்துக்கும் வித்தாக, திருப்பாவையைத் திருமாலுக்குப் பாமாலையாகச் சூட்டினாள்.

ஆழ்வார்களைத் தோற்றுவித்து, அவர்கள் வாழ்க்கை வரலாற்றின் மூலமும் மக்களைத் திருத்த முயன்றார். ஆழ்வார்களுள் கடைசி ஆழ்வாரான திருமங்கை மன்னரின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்டு ஆடவர்களைத் திருத்திப் பணிகொள்ள வைப்பதில் பெரும்பாலும் பெண்களுக்கே பங்குண்டு என்பதை நாம் இன்று காண்போம். திருமங்கையாழ்வார் கள்ளர் மரபில் தோன்றியதால் இயற்கையிலேயே வலிமையும், வீரமும் உடையவராக விளங்கினாலும், சிற்றின்பத்திலும் வேட்கை உடையவராக இருந்தார். எனவே திருமால் இவரைத் திருத்திப் பணிகொள்ள, அவருடைய சிற்றின்ப வேட்கையையே பயன்படுத்த திருவுள்ளம் கொண்டார்.

''முள்ளைக் கொண்டே முள்ளை எடுப்பாரைப் போல''

தேவலோகத்திலிருந்து பூவுலகில் திருவெள்ளைக் குளத்தில் குமுதமலர் பறித்து நின்ற பெண்ணை மருத்துவர் ஒருவர் வளர்த்து வருவதையும், அவள் அழகையும் பற்றி கேள்வியுற்ற நீலன் என்று வழங்கப் பெற்ற திருமங்கை மன்னன் அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். இதை உணர்ந்த திருமால், குமுதவல்லியைக் கொண்டே, இவரை இறையுணர்வில் ஆழ்த்தி, திருமாலடியவராக்க எண்ணினார். குமுதவல்லி திருமங்கை மன்னனின் ஆவலை அறிந்து, சங்கு, சக்கர இலச்சினைகளைப் பொறித்தல், திருமண் காப்பு தரித்தல், தாஸ்ய நாமம் பெறுதல், திருவாராதனை செய்தல், திருமந்திரம் பெறுதல் ஆகிய ஐந்தையும் தக்க ஆசாரியரிடமிருந்து பெற்று வந்தால் மணந்து கொள்வதாக இசைந்தார். இவரும் திருநறையூர் நம்பிகளிடம் பஞ்ச சம்ஸ்காரங்களைப் பெற்று குமுதவல்லியிடம் தெரிவித்தார். ஆனால் குமுதவல்லியோ மீண்டும் வேறு ஒரு நிபந்தனையைச் சொன்னார். ''எந்து பெரு செல்வர்களாய் திருமாலடியார்களை பூசிக்க நோற்றார்களே'' எனும் ஆழ்வாரின் அருளிச் செயலுக்கிணங்க, 1000 திருமாலடியார்களுக்கு ஓராண்டு காலம் அமுது படைத்து வந்தால் மணப்பதாக உறுதி கூறினார். இதைக் கேட்ட திருமங்கை மன்னனும் அவ்வாறே செய்வதாக உறுதி அளித்தார். முதல் நிபந்தனையை நிறைவேற்றியவர், இரண்டாவது நிபந்தனையையும் நிறைவேற்றுவார் என நம்பிக்கை வைத்து, அவரை திருமணம் செய்து கொண்டார் குமுதவல்லி. திருமங்கை மன்னனும் உறுதி செய்தபடியே தினமும் திருமால் அடியார்களுக்கு அமுது படைத்து வந்தார். இவ்வாறு திருமங்கை மன்னனை ஒரு ஒப்பற்ற திருமாலடியவராக மாற்றி அவரை ஆழ்ந்த பக்தியுடைய ஆழ்வாராகவும் ஆக்கிய பெருமை குமுதவல்லியையே சேரும். இப்படி பெண்களால், எத்தகைய முரடர்களையும் திருத்திப் பணிகொள்ள இயலும் என்பதை குமுதவல்லியார் திருப்பணியால் உணரலாம்.

## ''திருக்கோயில்'' வாசகர்களுக்கு வேண்டுகோள்!

பேரன்புடையீர்!

தவிர்க்க முடியாத காரணங்களால் 1.7.2002 முதல் ''திருக்கோயில்'' திங்கள் இதழின் உறுப்பினர் கட்டணங்கள் கீழ்க்காணும் வண்ணம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| தனி இதழின் விலை | ரூ. | 7.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | ரூ. | 75.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | ரூ. | 1000.00 |

அனைவரும் தங்கள் மேலான ஒத்துழைப்பினை வழங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் அவரது வாழ்க்கையில் உடனிருந்து திருமால் பக்தியில் சிறந்து விளங்கினார். எனவேதான் திருமங்கையாழ்வாருடன் குமுதவல்லியையும் சேர்த்து அர்ச்சை நிலையில் நாம் வணங்கி, வழிபட்டு வருகின்றோம். ஆழ்வார் எங்கு எழுந்தருளினாலும், குமுதவல்லியுடன் தான் எழுந்தருள்வார். இத்தகைய சீரிய தொண்டாற்றிய குமுதவல்லியாரின் திருத்திப் பணிகொள்ளும் சீரிய முறையை ஒவ்வொரு ஆண்டாள் கோஷ்டியினரும் பின்பற்றி, மக்களைத் திருத்திப் பணிகொண்டு, திருமால் அடியார்களை உருவாக்கினால், வைணவம் வெகுவிரைவில் தழைத்து ஓங்கும். வைணவர்கள் பல்லாயிரவர் பல்லாயிரவராகப் பல்கிப் பெருகுவர். நமது வைணவப் பெண்மணிகள் ஒவ்வொருவரும் திருமாலே ''மிக்க இறை'' என்பதையும், திருமால் நெறியே ''தக்க நெறி'' என்பதையும் உணர்ந்து, அந்நெறி நின்று, தமக்குத் துணைவர்களைத் தேடும் போது திருமாலடியவர்களையே தேர்ந்தெடுத்து மணப்பதை வைராக்கியமாகக் கொள்ள வேண்டும். அவ்வாறின்றி பிறநெறியினராயினும், குமுதவல்லியைப் போல, திருமால் நெறியினராக்கிய பின்னரே திருமணம் செய்துகொள்ள வேண்டும். திருமகள் முதலில் பரிந்துரையையும், பின்னர் தன் அழகையும் காட்டி திருமாலிடத்திலே காரியம் கொள்வதைப் போன்ற முறையையும் ஒவ்வொரு ஆண்டாள் கோஷ்டியினரும் பின்பற்ற வேண்டும்.

இல்லற வாழ்க்கையை ஏற்ற பின்னரும் திருமால் நெறியைப் பின்பற்றி, திருமாலையே சர்வ சதாகாலமும் மனத்தில் நினைத்து வாழ்வதாலும், கருவுற்றிருக்கும் காலத்தில் கொள்ளும் அந்நினைவு, கருவிலே உள்ள மகவைத் திருவுடைய மகவாக மாற்றும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இதனையே

''கருவிலே திருவிலாதீர் காலத்தைக் கழிக்கின்றீரே''

என்றார் தொண்டரடிப்பொடியாரும்.

ஒவ்வொரு ஆண்டாள் கோஷ்டியினரும் திருமால் நெறியையும், திருமாலைப் பற்றியும் இளம் வயது முதற்கொண்டே சொல்லி வந்தால் அவை பிள்ளைகளின் மனத்தில் ''பசுமரத்து ஆணிபோல'' நன்கு பதியும். இதனையே,

''இளமையில் கல்வி சிலையில் எழுத்து''
''தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரையில்''

என்ற சான்றோர் வாக்குகள் நமக்கு உணர்த்துகின்றன.


ஆண்டாள் கோஷ்டியினர், ஆண்டாள், கோபியர்கள் நீலாவதி, பொன்னாச்சி, கொங்குப்பிராட்டி போன்றவர்களைப் போல திருமாலிடத்தில் பெரும்பக்தி கொண்டு தான் மட்டும் இன்றி, தமது வழித் தோன்றல்களும்,

''எந்தை, தந்தை தந்தை தந்தைதம் மூத்தப்பன் ஏழ்படி கால் தொடங்கி,'' எனும் பெரியாழ்வாரின் அருளிச் செயலுக்கிணங்க, திருமால் அடியார்களாக விளங்கச் செய்ய வேண்டும். இதற்காக ஏதாவதொரு திவ்விய தேசப்பெருமாள் திருநட்சத்திர விழாவினுக்கென்று, நிரந்தரவைப்பு நிதியை வைத்து, அதன்மூலம் வரும் வட்டித் தொகையை அதற்குச் செலவிட வேண்டுமென்ற நிபந்தனையில் அறக்கட்டளையை ஏற்படுத்தினால், நிச்சயமாக நமக்குப் பின்னர், நமது பிள்ளைகளோ பேரன்மார்களோ அதைச் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுத்தப்படுவார்கள். இதனால் அவர்கள் தவறாமல் திருமால் நெறியைப் பின்பற்றி போற்றும் திருமாலடியவர்களாகத் திகழ்வர் என்பது உறுதி.

இப்படி இயன்ற வழிகளிலெல்லாம் நாம் திருமால் நெறிபோற்றி, அவர் திருவருள் பெற்று வாழ்வோமாக.


★★★



குன்றத்தூரில் சிறப்புற நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் விழாவில் கலந்துகொண்டு தொண்டைமண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்கள். திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமிகு டி. யசோதா அம்மையார், பேராசிரியர் முனைவர் செல்வக் கணபதி, திருக்கோயில் ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் பலரும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றினார்கள். வேலூர் இணை ஆணையாளர் திருமிகு ப. ராஜா, பி.எஸ்.சி., பி.எல்., சென்னை உதவி ஆணையாளர் திரு பி. வாசுநாதன், எம்.ஏ.பிஎல்., சேக்கிழார் திருக்கோயில் செயல் அலுவலர் திரு இராஜ்மோகன், எம்.ஏ., எம்.பில் ஆகியோர் விழா ஏற்பாடுகள் மிகச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

 பதிவு எண். T.N/CHIEF PMG/515/2002/WPP 283



மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தம்முடைய ஏப்ரல் மாதச் சம்பளத்தை மாங்காடு அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயிலுக்கு அன்னதானக் கட்டளைக்காக வழங்குகிறார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.

ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,

அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.